# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 12 வியாழக்கிழமை (25-01-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:59


# 3 அதிகாரிகள் உட்பட 11 படையினர் முகமாலையில் கண்ணிவெடிக்குப் பலி!

## ஓர் அதிகாரியும் நான்கு சிப்பாய்களும் காயம்

கொழும்பு,ஜன.25

தென்மராட்சி - முகமாலைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5.25 மணியளவில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் சிக்கி மூன்று படை அதிகாரிகள் உட்பட பதினொரு படையினர் உயிரிழந்தனர்; ஓர் அதிகாரி உட்பட ஐந்து படையினர் காயமடைந்தனர்.

முகமாலைப் பிரதேசத்தில் - கண்டி வீதிக்கு நெருக்கமாக - படையினரின் முன்னரங்க நிலைகளுக்கு அப்பால்- சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரே அங்கு ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. யாழ் - கண்டி வீதியில் படையினர் மீட்ட பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணி தொடர்ந்து இடம்பெறுவதாகவும் -

முகமாலைப் பகுதியிலுள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது புலிகள் மோட்டார்த் தாக்குதல் நடத்தியதாகவும் - படையினர் பதில் தாக்குதல் நடத்தி புலிகளின் தாக்குதலை முறியடித்துவிட்டனர் எனவும்- விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்தது. (உ-7)

# யுத்தநிறுத்தம் நீடிக்கப்பட்டதை வரவேற்கின்றன தமிழ்க்கட்சிகள்!

## சாதகமாகச் செயற்பட அரசுக்கு வற்புறுத்தல்

கொழும்பு,ஜனவரி25

**ஒருதலைப்பட்சமாக தாங்கள் அறிவித்த ஒரு மாத கால யுத்தநிறுத்தத்தை மேலும் ஒரு மாதத்துக்கு விடுதலைப் புலிகள் நீடித்திருப்பதை தமிழ்க் கட்சிகள் பலவும் வரவேற்றுள்ளன. இந்த அறிவிப்பைச் சாதகமாகப் பயன்படுத்தி ஆக்கபூர்வமாகச் செயற்படும்படி அவை அரசை வற்புறுத்தியுள்ளன.**

புலிகளின் இந்த அறிவிப்பு சமாதானத் தீர்வில் விடுதலைப் புலிகளுக்கு உள்ள ஆர்வத்தின் வெளிப்பாட்டை சர்வதேச சமூகத்துக்கு மீண்டும் வற்புறுத்தி இருப்பதாக அக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) போன்றவையே இந்த யுத்த நிறுத்த அறிவிப்பை வரவேற்றிருக்கின்றன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனையில் நேற்று உண்ணாவிரதப் போர்!

அம்பாறை,ஜன.25

கல்முனை தமிழ் உப பிரதேச செயலகத்தை, பிரதேச செயலகமாக தரமுயர்த்தக் கோரி அப்பகுதி தமிழ் மக்கள் நேற்று அந்த செயலகத்தின் முன்னால் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்முனைத் தமிழ்ப் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த உண்ணாவிரதத்தில் சுமார் ஆயிரம் பேர் வரை பங்குபற்றினர்.

1989 இல் தனியாகப் பிரிக்கப்பட்ட இந்தப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவது என அமைச்சரவை முடிவு செய்திருந்தும் கூட, அது இன்னும் செயற்படுத்தப்படவில்லை என்று உண்ணாவிரதத்தில் பங்குபற்றியோர் கவலை தெரிவித்தனர்.(உ-14)

## அக்கரைப்பற்றுப் பகுதியில் பாடசாலைப் பகிஷ்கரிப்பு

அம்பாறை,ஜன.25

இரண்டாவது கட்டமாக விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கும் யுத்தநிறுத்த அறிவிப்புக்கு மதிப்பளித்து, அரசாங்கமும் உடனடியாக யுத்தநிறுத்தம் செய்யவேண்டும் எனக் கோரி அக்கரைப்பற்றுப் பிரதேச தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் கடந்த திங்கள் முதல் தொடர்ச்சியான வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சு நடத்தும்படி வலியுறுத்த ஆயர்கள் குழு மிகவிரைவில் ஜனாதிபதியைச் சந்திக்கும்

கொழும்பு,ஜன.25

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு கோரும் வகையில் வடக்கு - கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ஆயர்கள் அடங்கிய ஆயர்கள் குழு ஒன்று அடுத்த மாத முற்பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளது.

யாழ்.ஆயர் வண.தோமஸ் சவுந்தரநாயகம், மன்னார் ஆயர் வண.இராயப்பு ஜோசப், மட்டு - திருமலை ஆயர் வண.கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோர் இந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக அடுத்தவார முற்பகுதியில் கொழும்பு வரவுள்ளனர் எனவும் -

இவர்களுடன் இரத்தினபுரி ஆயர் வண.மல்கம் ரஞ்சித் மற்றும் தென்னிலங்கை ஆயர்களும் இணைந்து சந்திப்பில் கலந்து கொள்வர் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (உ-7)

## மத்திய வங்கி திடீர் அறிவிப்பு: நாணயமாற்று வீதங்களை இனிமேல் வர்த்தக வங்கிகளே நிர்ணயிக்கும்!

கொழும்பு,ஜன.25

வெளிநாட்டு நாணயமாற்று வீதங்கள் குறித்து முற்கூட்டியே தீர்மானித்து அறிவித்து வந்த மத்திய வங்கி, நேற்று முன்தினம் முதல் அந்த வீதங்களை அறிவிப்பதிலிருந்து விலகியிருப்பதாக திடீரென அறிவித்தது.

இலங்கை ரூபாவின் பெறுமதியை சந்தையில் ஸ்திரமாக்கும் பொருட்டு, சுயாதீனமாக அதை இயங்கவிடும் நோக்குடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மத்திய வங்கி அறிவித்தது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்தம் செய்யும்படி அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு தமிழ்க்கட்சிகள் கோரிக்கை

## சுவீடன் தூதரை நேற்று நேரில் சந்தித்து வேண்டுகோள்

கொழும்பு,ஜன.25

யுத்தநிறுத்தத்தைச் செய்யுமாறு இலங்கை அரசுக்கு சுவீடன் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று இலங்கைக்கான சுவீடன் நாட்டுத் தூதுவரை தமிழ்க் கட்சிகள் நேரில் சந்தித்துக் கோரிக்கை விடுத்துள்ளன.

கொழும்பிலுள்ள சுவீடன் நாட்டு தூதுவரின் வாசஸ்தலத்தில் நேற்று நடைபெற்ற இச்சந்திப்பில் சுவீடனின் இலங்கைக்கான தூதுவரும் தெற்காசிய விவகாரங்களுக்கான பெண் அதிகாரி ஒருவரும் கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை நீடித்துள்ள போதிலும் அரசாங்கம் தொடர்ந்தும் அதை நிராகரித்து வருகின்றது என்றும் -

அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றுவது போல் ஐரோப்பிய நாடுகளையும் ஏமாற்ற நினைக்கின்றது என்றும் -

பேச்சுக்குத் தயார் எனக் கூறும் அரசாங்கம், யுத்தநிறுத்தத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது எனத் தெரிவிப்பது பேச்சில் அரசுக்கு அக்கறையில்லாத தன்மையை எடுத்துக்காட்டுகின்றது. என்றும் -

தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் சுவீடன் நாட்டுத் தூதுவரிடம் எடுத்துக் கூறினர்.

ரெலோ முதல்வர் என் ஸ்ரீகாந்தா, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி தலைவர் அ.விநாயகமூர்த்தி, செயலாளர் ந.குமரகுருபரன், ஜனநா

(14ஆம் பக்கம் பார்க்க)

## காலி துறைமுகத்தில் புலிகளின் கொடி

கொழும்பு,ஜன.25

காலித் துறைமுகத்துக்குள் விடுதலைப் புலிகளின் கொடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. துறைமுக ஊழியர்களால் கண்டுபிடிக்கப்பட்ட இக்கொடி துறை முகத்துக்குள் எப்படி வந்து சேர்ந்தது என்பது குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (உ-5)

## கொழும்பில் நிமலராஜன் நினைவு நிகழ்வு

கொழும்பு,ஜன.25

யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் மூன்றாம் மாத நினைவுதினக் கூட்டம் நேற்று மாலை கொழும்பில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கொழும்பு பல்கலைக்கழக அரசியல்துறை விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன், ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பிரதித் தலைவர் இரா.துரைரட்ணம் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். (உ-5)

## கிளாலிச் சமரில் 5 புலிகள் மரணம்

வவுனியா,ஜன.25

கடந்த 16 ஆம் திகதி கிளாலிப் பகுதியில் படையினருடன் இடம்பெற்ற மோதலில் தமது தரப்பில் யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த ஐவர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

குட்டி(முருகேசு மகேந்திரம்), கண்ணாளன்(தவராசா ஜதீஸ்வரன்), கப்டன் ஒளியரசி,மதுரா (மாசிலாமணி பிரியந்தி), சச்சிதானந்தம் சுபாசினி ஆகியோரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களாவர். (உ-5-164)

## இரு மீனவரும் திரும்பினர்

வவுனியா,ஜன.25

முல்லைத்தீவு மாத்தளன் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதல்களை அடுத்து காணாமற்போனதாகக் கூறப்பட்ட இரு மீனவர்களும் நேற்று கரைக்கு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களது சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் பீரங்கித் தாக்குதலினால் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-5-164)

## புலி உறுப்பினர் உயிரிழப்பு

வவுனியா,ஜன.25

தைப்பொங்கல் தினத்தன்று வவுனியா வைரவப் புளியங்குளத்தில் படையினரின் சூட்டுக்கு இலக்காகி தமது உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பவளராஜ் (மரியநாயகம் மரிய ஜோன் ரீயூனஸ்) என்பவரே உயிரிழந்தவராவார். (உ-5-164)

## கண்டியில் எதிர்ப்புக் கூட்டம்

கொழும்பு,ஜன.25

கண்டி தலதா மாளிகையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தின் மூன்றாவது வருட நினைவு தினமான இன்று 'சிஹல உறுமய' கட்சி கண்டியில் எதிர்ப்புக் கூட்டம் ஒன்றினை நடத்தவுள்ளது.

'சிஹல உறுமய' கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண தலைமையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வாடகை வீடு

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையினர் பயன்படுத்துவதற்கு வசதியாக சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்குத் தேவைப்படவுள்ளது. கொக்குவில் தெற்கு, கொக்குவில் கிழக்கு மற்றும் திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி தெற்கு பிரதேசங்களாகவும் பல்கலைக்கழகத்துக்கு ஒரு மைல் சுற்றாடலிலும் அமைந்திருப்பது விரும்பத்தக்கது. வாடகை பற்றிய விவரங்கள் நேரிலேயே கலந்துரையாடித் தீர்மானம் மேற்கொள்ளலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் *பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.* என்னும் முகவரிக்கு தபால் மூலம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*யாழ்.பல்கலைக்கழகம்*
*யாழ்ப்பாணம்.* (C/14970) **- பதிவாளர்.**

# பாராட்டும் வாழ்த்துக்களும்

- ★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உள்ளக கணக்காய்வுப் பிரிவில் சிரேஷ்ட எழுதுவினைஞரும் ~
- ★ ஆவரங்கால் சிவன்கோயில் இந்து மன்றத் தலைவரும் ~
- ★ ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளரும் ~
- ★ ஆவரங்கால் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளரும்~
- ★ அச்சுவேலி ப.நோ.கூ.சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினரும்~
- ★ ஆவரங்கால் மேற்கு அலகு இலங்கை செஞ்சிலுவைச் சங்கச் செயலாளரும் ~
- ★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் முன்னாள் இணைச் செயலாளரும் ~
- ★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக எழுதுவினைஞர், தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியத்தின் தலைவருமாகிய ~



**உயர்திரு. நீலப்பிள்ளை மயில்வாகனம் J.P**
அவர்கள் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக கௌரவிக்கப்பட்டமையையிட்டு நாம் எமது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C/14952) **யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நண்பர்கள்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 - 09 - 1957 | 26 - 12 - 2000 |

## சுந்தரலிங்கம் சுரேஸ்குமார்

**(வெள்ளையன் - U.K)**

உறவுக்கொரு வெள்ளையன்
அன்று உறவைப் பிரிந்து கடல் கடந்தாய்
இன்று உலகையே விட்டுப் பிரிந்தாயோ! ஆனாலும்
என்றும் நீ நீக்கமற எம் மனதில் வாழ்வாய்!
உன் ஆத்மா சாந்தியடைய
முருகப் பெருமானை வேண்டுகின்றோம்.

*"சுஸ்வரி வாசா"*
*மாலு சந்தி, அல்வாய்.*

உன் பிரிவால் துயருறும்:
**P.K.மகாலிங்கம் (சித்தப்பா)**
(C/14923) **சித்தி, தம்பிமார், தங்கை**

## சகோதரர்கள் இருவரும் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.25

கடந்த 19 ஆம் திகதி வீட்டில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்ட யாழ்.வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சகோதரர்கள் இருவரும் விசாரணைகளின் பின்பு நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த குணசேகரம் குணதாசன்(வயது-22), குணசேகரம் குணதீபன்(வயது -20) ஆகிய இருவருமே நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் ஊரெழுவில் உள்ள 511ஆவது படையணி இராணுவத்தினரால் விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களின் விடுதலை தொடர்பாக உறவினர்களால் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-10)

## விடைத்தாள் திருத்தும் பணி பூர்த்தி

கொழும்பிலிருந்து திருத்தும் பணிக்கென எடுத்துவரப்பட்ட ஜீ.சி.ஈ (சாதாரண தரப்) பரீட்சை விடைத்தாள்கள் அந்தப் பணி பூர்த்தியடைந்ததை அடுத்து இன்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் மீண்டும் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

அத்துடன் மிகுதி வினாத்தாள்கள், காகிதாதிகள் என்பனவும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக யாழ்.கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-10)

இதோ வந்துவிட்டது!
**கொம்பியூட்டர் ருடே**
ஒக்ரோபர்,நவம்பர், டிசம்பர்,ஜனவரி(2001)
ஆகிய மாத கொம்பியூட்டர் ருடே விற்பனைக்கு உண்டு
தொடர்பு:-
**ராஜா குறோசரீஸ்**
*153, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (நியூ விமாகி அருகில்)*
(83329)

## தேவை

நல்ல திறமையுள்ள கணக்காளர் தேவை. சான்றிதழுடன் (பெண்கள்) நேரில் சமுகம் தரவும்.
தொடர்பு:-
**பேபி போட்டோ, பலாலி றோட், கந்தர்மடம்.** (83319)

**லஷ்சுமி** இணுவில்
விஜயகாந்த் மீனா, நடித்த
**வானத்தைப் போல**
*இந்தியாவில் 200 நாள்கள் ஓடி வெள்ளி விழாக் கொண்டாடியது.*
காட்சிகள் 10.30, 2.30 (ப.நே.)
(83328)

**நாகம்ஸ்** சுன்னாகம்
**டைட்டானிக்**
(தமிழ் - நீல்ஸ்)
காட்சிகள்:10.30, 230 (புதிய நேரம்)
29.01.2001 முதல்
*பெண்ணின் மனதைத் தொட்டு*
(83334)

**ராஜா** யாழ்ப்பாணம்
**பிரசாந்த், சிம்ரன், லைலா, ரகுவரன், - வையாபுரி**
மற்றும் பலரின் நடிப்பில
*பார்த்தேன் ரசித்தேன்*
காட்சிகள்: 10.30, 2.00 (ப.நே.)
(C/14951)

# கைதான இளைஞன் விடுவிப்பு

வலி.மேற்கு ,ஜன.25

சித்தன்கேணியில் தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நடராசா சிவராசா(வயது18) என்பவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நிபந்தனையின் பேரில் விடுதலை செய்யப்பட்ட இந்த இளைஞரை சங்கானையிலுள்ள படைமுகாமில் வாரத்துக்கு ஒருமுறை கையொப்பமிட வேண்டும் என்று இராணுவத்தினர் பணித்துள்ளனர். (த-175)

# யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை

## இல்ல மெய்வல்லுநர் போட்டி 2001

**கனிஷ்ட பிரிவு**

தலைவர் : திரு.பொ.சுந்தரலிங்கம் *(அதிபர்)*
காலம் : நாளை (26.01.2001) வெள்ளிக்கிழமை மு.ப.9.00 மணி
இடம் : கல்லூரி மைதானம்

பிரதம விருந்தினர் : திரு.சி.மாதவகுமார் அவர்கள்
*(உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பப் பிரிவு, வலிகாமம் வலயம்)*
பரிசில் வழங்குநர்: திருமதி மஞ்சுளாதேவி மாதவகுமார்

**சிரேஷ்ட பிரிவு**

தலைவர் : திரு.பொ.சுந்தரலிங்கம் *(அதிபர்)*
காலம் : 27.01.2001 சனிக்கிழமை பி.ப. 1.00 மணி
இடம் : கல்லூரி மைதானம்

பிரதமவிருந்தினர்: திரு.வே.சோ.சொக்கலிங்கம் அவர்கள்
*(பொது முகாமையாளர், வடபிராந்திய போக்குவரத்துச் சபை)*
சிறப்பு விருந்தினர்: வைத்திய கலாநிதி பொ.மகாதேவன் அவர்கள்
கௌரவ விருந்தினர்: 1) திரு.ஆ.வ.கணேசலிங்கம் அவர்கள்
*(உதவிக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)*
2) சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
பரிசில் வழங்குநர்: திருமதி சந்திராதேவி சொக்கலிங்கம் அவர்கள்
*(பிரதி அதிபர், வேம்படி மகளிர் கல்லூரி)*

**பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(83328) **- மகாஜனச் சமூகம்.**

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
**திருமதி மோகனவதனி ரவீந்திரன்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**அமரர் வ.சுப்பிரமணியம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**ஆசிரியர் கழகம்,**
**யா/செங்குந்த இந்துக் கல்லூரி,**
**திருநெல்வேலி கிழக்கு.**
(83327)

# மரண அறிவித்தல்கள்

## இராமுபிள்ளை இரத்தினம்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுபிள்ளை இரத்தினம் நேற்று (24,01.2001 புதன்கிழமை காலமானார்.

அன்னார் இந்திராணியின் அன்புக் கணவரும் ஆனந்தி, கண்ணன் (முன்னாள் வீடியோ படப்பிடிப்பாளர் - லண்டன்), கீதா, நந்தா, தர்ஷா, சுபா, கோபி, குமரன், துர்க்கா ஆகியோரின் அன்புத் தந்தையும் வாமதேவா, எழில்வேந்தன் ஆகியோரின் மாமனாரும் சந்துரு, சாம்பவி, கோகுலன், அபிராமி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.01.2001) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தற்காலிக முகவரி:
*டச்சு வீதி,*
*சித்தன்கேணி.*

நிரந்தர முகவரி:
*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*

தகவல்:
வாமதேவா(மருமகன்)
(அபிராமி ஆட்டோ
ஈச்சமோட்டை.)
(83337)

## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை 22.01.2001 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2001) பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரவெட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.பரஞ்சோதி (மருமகன்)

தற்காலிக முகவரி:
*க.சிதம்பரநாதன்,*
*செங்குந்தா வீதி,*
*கரவெட்டி.* (83335)

நிரந்தர முகவரி:
*சரசாலை வடக்கு,*
*சாவகச்சேரி.*

# உதயன்

## என்ன சொல்லப் போகிறார்...

வடக்கு—கிழக்குப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்கள், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த மக்கள், நேற்றைய பத்திரிகைகளைப் படித்ததும் சற்று மன ஆறுதல் அடைந்திருப்பர். கடந்த ஒரு மாத காலமாக இருந்த அதே சூழ்நிலை தொடரும்— அரசு — விடுதலைப் புலிகள் போர் உக்கிரம் அடையாதிருக்கும்—என்ற நம்பிக்கை அந்த மன ஆறுதலைத் தந்திருக்கும்.

ஆம். அரசாங்கப் படைகள் போர் நிறுத்தம் செய்யாத போதிலும் தமது ஒரு தலைப் பட்சமான போர் நிறுத்தத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடித்திருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் கடந்த ஒரு மாத காலமாகப் போர் நிறுத்தம் செய்திருந்ததை அரசாங்கம் சந்தேகக் கண்ணுடனேயே பார்த்தது.

★ அவர்கள் சமாதானத்தின விருப்பத்தின் பேரிலன்றி, சர்வதேச சமூகத்தில் அத்தகைய ஒரு கருத்தை உண்டாக்குவதற்கே போர் நிறுத்தம் செய்தார்கள்.

★ இதனை ஓர் அரசியல் தந்திரமாகவும் செய்தனர்.

★ விடுதலைப் புலிகள் இப்போது பலவீனப்பட்டுள்ளதால தம்மைப் பலப்படுத்துவதற்கு அரசையும் போர் நிறுத்தம் செய்ய வைப்பதற்காகவே இத்தகைய பொறியை வைத்தார்கள்.

தான் பதிலுக்குப் போர் நிறுத்தம் செய்யாதிருந்தமைக்கு, அரசாங்கம் மேற்சொன்ன காரணங்களையும் வேறு "நியாயங்களை" யும் முன்வைத்திருந்தமை தெரிந்ததே.

அரசாங்கத்தின் இத்தகைய குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியிலும்—

ஒருதலைப்பட்ச போர் நிறுத்த காலத்தில் அரச படைகள் தாம் இழந்த பகுதிகளை மீட்பதற்காக இராணுவத் தாக்குதல்களை நடத்திய போதிலும் —

சமாதானத்துக்கான, பேச்சுவார்த்தைக்கான தமது விருப்பத்தையும் நல்லெண்ணத்தையும விடுதலைப் புலிகள் இரண்டாவது தடவையாகவும் வெளிப்படுத்தி உள்ளனர்.

நோர்வே அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு மேலும் அவகாசம் அளிப்பதன் பொருட்டும் தம் போர் நிறுத்தத்தை நீடித்துள்ளதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

நோர்வேயின் முயற்சிகளுக்குத் தாமும் பெரும் ஆதரவாக இருப்பதாகவும் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனை எதுவுமின்றிப் பேசுவதற்குத் தயார் என்றும் அரச தரப்புக் கூறி வருகின்றது. ஆனால் போரைத் தணித்துச் சுமுகமான சூழ்நிலையில் பேசுவதற்கு முன்வருவதாக இல்லை.

அல்லது பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருக்குமா?

அரசு இனி என்ன சொல்லப் போகிறது? யதார்த்தத்தை உணர்ந்து, நாட்டு நலன் நாடி இம்முறையாவது அரசாங்கம் தானும் போர் நிறுத்தம் செய்து சமாதான முயற்சிகள் வெற்றி பெற உதவவேண்டும்.

ஆக்கபூர்வமான வழியில் சிந்தித்து நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற முன்வரவேண்டும். அதுவே எல்லோரது விருப்பமுமாகும்; மக்களுக்கு நன்மை செய்ய வல்லதும் அதுவே!

# செய்தியாளரை விடுவிக்கக் கோரி பத்திரிகையாளர் சங்கம் கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 25

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கொழும்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள யாழ். பத்திரிகையாளர் நடராஜா திருச்செல்வத்தை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரி வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்று அவசர பக்ஸ் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'லேக் ஹவுஸ்' நிறுவன பத்திரிகைகளின் பருத்தித்துறை நிருபராகக் கடமையாற்றிவந்த ந. திருச்செல்வம் வெள்ளவத்தையில் அவர் தங்கியிருந்த வீட்டில் வைத்து கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காக 12 தினங்கள் தனியான அறை ஒன்றில் வைத்து மண் நிரப்பிய 'எஸ்-லோன்' பைப்புகளால் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், எம்.பியுமான அ. விநாயகமூர்த்தி மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பாயிஸ் முஸ்தபாவின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

இதனையடுத்து திருச்செல்வத்தை நேரில் சந்தித்து அவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகதமக்கு அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிக்குமாறு மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் ஆணைக்குழுவின் அதிகாரியான எஸ். ஸ்ரீதரனுக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

எஸ் ஸ்ரீதரன் சமர்ப்பித்த அறிக்கையைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட பொலிஸாரை எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு தமது அலுவலகத்தில் விசாரணைக்கு வருமாறு மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் உத்தரவிட்டுள்ளார்—

என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பக்ஸ் செய்தியின் பிரதிகள் எதிர்க்கட்சித் தலைவர், தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள், லேக்ஹவுஸ் நிறுவனப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (உ—7)

## செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 8 வகுப்பில்வாழ்க்கைத் தேர்ச்சி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

மேற்படி செயலமர்வு எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும் எனமுன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (உ-7)

## ஊர்காவற்றுறையில் நாய்களுக்குத் தடுப்பூசி

ஊர்காவற்றுறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்குக் தடுப்பூசி போடும் பணி இன்று வியாழக்கிழமை பின்வரும் நிலையங்களில் நடைபெறவுள்ளது.

விவரங்கள் வருமாறு;-

★ 10-30—11-15—கிராம சேவை அலுவலர் அலுவலகம் — சுருவில்.

★ 11-30—12-15—கிராம சேவை அலுவலர் அலுவலகம்—புளியங்கூடல்.

★ 12-30—1-15 — நெசவு சாலை— புளியங்கூடல்.

★ 1-30—2-00 — புளியங்கூடல் சந்தி.

★ 2-15—3-00 — பாலர் பாடசாலை—சின்னமடு.

பொதுமக்கள் தங்கள் வளர்ப்பு நாய்களைத் தவறாது அண்மையிலுள்ள நிலையங்களுக்குக்கொண்டு சென்று தடுப்பூசி போடுமாறு ஊர்காவற்றுறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார். (ஐ-16)

## நாளை

தை 13

வெள்ளிக்கிழமை

திதி: துதியை

முன் இரவு 11 05 வரை

நட்சத்திரம்; அவிட்டம்

முன் இரவு 10.27 வரை.

சுபநேரம்: 6.36 — 8.06

ராகுகாலம்: 11.06—12.36

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## பிணை அனுமதி

யாழ்ப்பாணம ஜன. 25

செம்மணிப் பகுதியிலுள்ள வீடுகளில் பொருள்களை எடுக்கச் சென்ற சமயம் படையினரால் கைது செய்யப்பட்ட 6 பேரும் நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்களை ஆள்ப்பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

மக்கள் குடியமர அனுமதிக்கப்படாத பகுதியில் உள்ள வீடுகளில் பொருள்களை எடுக்கச் சென்ற குழுவில் ஒருவர் மிதிவெடியில் சிக்கியதுடன் ஐவர் படையினரால் கைது செய்யப்பட்டு யாழ். பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மிதிவெடியில் சிக்குண்டு படுகாயமடைந்தவரான கு. ஜெகதீஸ்வரன் உட்பட சி உதயகுமார், சி. ஜெயக்குமார், இ. சிவனேந்திரன், இ. ஜெயக்குமார், க. ஜெயக்குமார் ஆகிய ஆறுபேரையுமே தலா ஐயாயிரம ரூபா ஆள்பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். (உ-6)

## ஆசிரியர் சம்பளம்

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் தமது ஜனவரி மாதச் சம்பளக் காசோலைகளை, கடந்த (2000) ஆண்டுக்கான முழு லீவு விவரத்தையும் பீ 100 படிவத்தில் சமர்ப்பித்து நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்னர் கரவெட்டியிலுள்ள ரலன்ற் கல்வி நிலையத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார் (ஐ-173)

★ ★ ★

வடமராட்சி, ஜன. 25

கைதடி நாவற்குழி அ. த. க. பாடசாலை ஆசிரியர்கள் தங்கள் ஜனவரி மாதச் சம்பளத்தை, கடந்த (2000) ஆண்டிற்கான லீவு விவரங்களை "பி 100" படிவத்தில் சமர்ப்பித்து இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கும் 5 மணிக்கும் இடையில் தும்பளை சிவப்பிரகாசமகா வித்தியாலயத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர் வி ரி. திருநாவுக்கரசு கேட்டுள்ளார். (ஐ-173)

### உதயவாக்கு

உறுதியும், ஊக்கமும் உழைப்பும் இளமையைப் பாதுகாக்கின்றன.

# ஆன்மீகக் கண்காட்சி

வடபிராந்திய சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்புக் குழுவின் இளைஞர் பிரிவினர் நடத்தும் 'மனித மேம்பாடுகள் ஊடான ஆன்மீகக்' கண்காட்சி நாளையும் மறுநாள் சனிக்கிழமையும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது

அந்தக் கண்காட்சி நிகழ்வின் தலைமையுரையை சாயி நிறுவனங்களின் வட பிராந்திய இணைப்புக் குழுவின் தலைவர் வே. சேனாதிராஜாவும் அறிமுகவுரையை பேராசிரியர் செ. சிவஞானசுந்தரமும் நிகழ்த்தவுள்ளனர்.

காலை 9 தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை கண்காட்சி இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் ஆகியோர் கண்காட்சியை ஆரம்பித்துவைப்பர்.

மனித மேம்பாடுகளின் அவசியத்தையும் ஆன்மீக விழிப்புணர்வையும் ஏற்படுத்துகின்ற இந்தக் கண்காட்சியை மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் கண்டு பயன்பெறுமாறு இணைப்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (ஐ-10-17)

# இணுவில் பிரதேசத்தில் திருட்டுகள் அதிகரிப்பு

## இரண்டாவது தடவையாக கடை உடைப்பு

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்று கடந்த திங்கள் இரவு உடைக்கப்பட்டு சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீராஜ மாதங்கன் ஒட்டுக் களஞ்சியம் என்னும் வர்த்தக நிறுவனத்திலேயே திருட்டு இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த வர்த்தக நிறுவனத்தில் முன்பும் ஒரு தடவை திருட்டு இடம் பெற்றது.

இதேவேளை—

கடந்த திங்களன்று இரவு இணுவில் பகுதியில் மேலும பல திருட்டு முயற்சிகள்இடம் பெற்றுள்ளன. இதைவிட இணுவில்—மானிப்பாய் வீதியில உள்ள ஒரு வீட்டில் இருந்து இரு சைக்கிள்கள் அன்றிரவு அபகரிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## சமய சந்நிதிகளில்

கோப்பாய், ஜன. 25

நீர்வேலி வடகோவை அருள்மிகு சாந்தி துர்க்கா ஆலய சாந்திக மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும்.

இன்று மாலை பூர்வாங்கக் கிரியையுடன் ஆரம்பமாகும் இந்த விழாவில் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் வேட்டைத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும், சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவு, ஞாயிறு காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ-72)

★ ★ ★

சங்கானை கிழக்கு நிகரை அருள் மிகு ஞானவைரவர் ஆலய சம்புரோக்ஷண பஞ்ச குண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கும் 8 மணிக்கும இடையில் நடைபெறும்.

இக் கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் இன்று வியாழன்முதல் நடைபெறும. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம் பெறும். (ஐ-173)

## அனுமதி மறுப்பு

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கைதடிப் பகுதிக்கு நேற்று செல்ல முற்பட்ட பொதுமக்கள் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

நேற்று முன்தினம் இராணுவத்தின் அனுமதியின்றி அப்பகுதிக்கு சென்ற சுமார் முந்நூறுக்கும் மேற்பட்ட மக்கள் தமது வீடுகளில் இருந்து தாம் விட்டு வந்த பொருள்களில் சிலவற்றை மீட்டு வந்தனர்

தொடர்ந்தும் நேற்று மக்கள் அங்கு செல்ல முற்பட்ட வேளையே தகவலறிந்த இராணுவத்தினர் அவர்களை அங்கு செல்ல விடாது தடுத்து திருப்பி அனுப்பினர் (உ-15)

## மட்டுவில் தெற்கு மாணவருக்கு!

மட்டுவில் தெற்கு சாந்த நாயகி வித்தியாலயத்தில் கல்வி கற்று தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களையும் 'திருமதி ப. சூரியகுமரன், சுதுமலை சிந்மய பாரதி ஆரம்பப் பாடசாலை அருகில் சுதுமலை மத்தி' முகவரியில் தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்யுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

இலவசச் சீருடை மற்றும் இலவசப் பாடநூல் ஆகியவற்றை வழங்குவதற்கு இந்த விவரங்கள் தேவைப்படுவதாகவும்—அவர் அறிவித்துள்ளார். (உ-7)

## கண்காட்சி

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆரம்பக்கல்வி கற்பித்தல் உபகரணக் கண்காட்சி இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில் இடம்பெறும். (ஐ-72)

## கல்வியியல்கல்லூரி பழைய இடத்தில்!

மருதனார்மடத்தில் இயங்கி வந்த யாழ் தேசிய கல்வியியல் கல்லூரி இன்று முதல் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இயங்கவுள்ளதாக அதன் பீடாதிபதி தி. கமலநாதன் அறிவித்துள்ளார் (ஐ)

## விண்ணப்பதினம் நீடிப்பு

சிறைச்சாலைக் காவலர் பதவிக்கான விண்ணப்ப முடிவு தினம் பெப்ரவரி 25 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவுதினம் ஜனவரி 25 ஆம் திகதி என முன்பு அறிவிக்கப்பட்ட போதிலும் யாழ் சிறைச்சாலை அதிகாரிகளின் முயற்சியின் பேரில் இந்தத் திகதி மேலும் ஒரு மாதகாலத்தில் நீடிக்கப்பட்டுள்ளது

இந்தப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமிழ், கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-15)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு சமீபமாக கிணற்றுடன் 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: M. மனோகரன் 'மனோ அம்மன்', மானிப்பாய்.

(83305)

### தவறிவிட்டது

நந்தாவில் லேன், தாவடி, கொக்குவில் என்னும் முகவரியைச் சேர்ந்த சற்குணநாதன் சந்திரிகா என்பவரது விசேட அடையாள அட்டை (0906002295) கடந்த வாரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 35/8, சிவகுருநாதன் லேன், நீராவியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து தவவும். (83316)

### தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறி

யாழ்ப்பாணம்,ஜன.25

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறிக்குத் தெரிவு செய்த மாணவர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன என்றும் -

பதிவுகள் நாளை 26ஆம் திகதி மேற்கொள்ளப்படும் என்றும் யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

கடிதங்கள் கிடைக்காதவர்கள் நேரடியாக வந்து விளம்பரப் பெயர்ப் பலகையில் பெயரைப் பார்வையிட்டு பதிவை மேற்கொள்ளலாம். (க)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 - 03 - 1922



மறைவு 25 - 01 - 2000

### அமரர் சின்னத்தம்பி பொன்னையா

திதி: 25-01-2001

எங்கள் மேல் மிகுந்த பாசமுள்ள அன்பு அப்பாவே!
நீங்கள் எந்தநாளும் கூறுவீர்கள் எனக்கு "இந்த உலகமே நீங்கள் தான்" என்று. ஆனால்
இப்பொழுது எங்களைத் தனியாகத் தவிக்கவிட்டு விட்டு
நீங்கள் ஆண்டவனின் பொற்பாதக் கமலத்தை ஆனந்தமாக அடைந்து விட்டீர்கள்.

உங்களை நினைத்து உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

(83321)

## மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்



### கலாநிதி க.குணராசா

இன்று மணி விழாக்காணும் எங்கள் கலாநிதியே!
நிர்வாகி என்றவுடன் நின்னுருவம் முன் தோன்றும்!
புவியியல் மாணவரின் பிரியமுள்ள ஆசான்நீ!
எழுத்துத் துறையிலும் எத்தனையோ சாதனைகள்....
சிறுகதைகள், நாவல்கள், திறனாய்வுக் கட்டுரைகள், வரலாற்று
நிகழ்வுகள் மறையாமல் சித்திரங்கள்....
நுண்ணறிவு சஞ்சிகைகள், நூல்கள் எனப் பலவிரியும்
எண்ணில்... தனிமனித இயக்கமாய்த் திகழ்பவனே!
அன்னைத் தமிழுக்கு அணிசேர்க்கும் ஆழியானே,
மன்னுதமிழ் இலக்கிய வரலாறு உனைப்பேசும்.
இன்றுபோல் என்றும்நீ இளமையுடன் வாழியென
நின்மணி விழாநாளில் நெஞ்சார வாழ்த்துகின்றோம்!

*யாழ்ப்பாணம்.*

யாழ்.மாவட்ட
கிராமசேவையாளர் சங்கம்.
பதிவு இல.T.U. 2113

(83314)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி குட்டித்தம்பி இராசலட்சுமி

கோப்பாய் மத்தி காளிகோயிலடியைச் சேர்ந்த திருமதி குட்டித்தம்பி இராசலட்சுமி 22.01.2001 அன்று காலமானார்.

அன்னார் சின்னக்குட்டி குட்டித்தம்பியின் அன்பு மனைவியும், ஜெகதீஸ்வரி (ஜேர்மனி), தயாநிதி (பிரான்ஸ்), மனோகரன் (ஜேர்மனி), ஜெயபாலகரன் (ஜேர்மனி), சுதாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரன் (ஜேர்மனி), ரகுநாதன் (பிரான்ஸ்), ஜெயந்தி (ஜேர்மனி), விஜிதா (ஜேர்மனி), நடனகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், விக்ரோறியா (சின்னளா), செல்வராசா (ஜேர்மனி), சற்குணராசா (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளி கோயிலடி,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

தகவல்:
குட்டித்தம்பி (கணவர்)
மு.தனபாலசிங்கம் (பெறாமகன்)

(83320)

### ஐயாத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா

133, 4ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா 19.01.2001 அன்று சுவிஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை -மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், அருள்மலரின்(சுவிஸ்) அன்புக்கணவரும், காலஞ்சென்ற மகாலிங்கம் (ஆசிரியர்), கனகம்மா(ஓய்வு பெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2001) வியாழக்கிழமை இலங்கை நேரம் 4-5 மணிவரையில் சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தற்காலிக முகவரி:-*
*கலட்டி அம்மன் ஒழுங்கை,*
*கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.* (83323)

தகவல்:-
வி.கந்தையா (மைத்துனன்)

### தம்பையா சின்னையா

எழுதுமட்டுவாழ் தெற்கு சிவன்கோயில் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், இல.61/6 நெட்டிலிப்பாய் கோண்டாவிலை தற்காலிக முகவரியாகவும் கொண்ட தம்பையா சின்னையா அவர்கள் நேற்று (24.01.2001) இறைபதம் எய்தினார்.

அன்னார் பாறிப்பிள்ளையின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, நாகேஸ்வரி, இராசேஸ்வரி, பேரின்பமலர், யோகேஸ்வரி(சுவிஸ்), லோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கந்தசாமி, சுப்பிரமணியம், அம்பிகாபதி, தர்மலிங்கம், செல்வராசா(சுவிஸ்), நாகநாதன்(லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2001) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*இல.61/6, நெட்டிலிப்பாய்,*
*கோண்டாவில் மத்தி,*
*கோண்டாவில்.*

(83324)

தகவல்:-
த.பாறிப்பிள்ளை (மனைவி)

### வேலுப்பிள்ளை கணவதிப்பிள்ளை

அராலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கணவதிப்பிள்ளை (23.01.2001) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், சோதிமலர் (கொழும்பு), காந்திமலர் (லண்டன்), திருநடனசிவம் (பொறியியலாளர், கொழும்பு), ஆனந்தசிவம் (உடுப்பிட்டி), பாஸ்கரசிவம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைராசா (இளைப்பாறிய மக்கள் வங்கி ஊழியர், கொழும்பு), காலஞ்சென்ற பத்மநாதன் (லண்டன்) மற்றும் கமலாசனி (கொழும்பு), சசிகலா (உடுப்பிட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும், து.ஜெகதீபன் (லண்டன்), து.விஜிதா (கொழும்பு), ப.கண்ணன் (லண்டன்), ப.பிரதீபா (லண்டன்), தி.நிருஷன் (கொழும்பு), ஆ.கவாஸ்கர், ஆ.ஒமேஸ்காந்த் (மாணவர்கள், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*வீரபத்திரர் கோயில்,*
*தெற்கு உடுப்பிட்டி.*

(83322)

தகவல்
க.ஆனந்தசிவம் (மகன்)

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

## சங்கானை கிழக்கு அருள்மிகு நிகரை ஞான வைரவ ஆலய

### சம்புரோக்ஷண பஞ்சகுண்ட பக்ஷ

# கும்பாபிஷேகப் பெருவிழா

| | | |
|---|---|---|
| 25.01.2001 | வியாழன் அதிகாலை | கர்மாரம்பம் |
| 26.01.2001 | வெள்ளிக்கிழமை காலை | விநாயக வழிபாடு, நவக்கிரக ஹோமம் சாந்தி, பிரவேச பலி |
| 27.01.2001 | சனிக்கிழமை காலை: மாலை: | விநாயக வழிபாட்டுடன் பிரசன்ன பூசைகள் |
| 28.01.2001 | ஞாயிற்றுக்கிழமை காலை: | 7.00 மணி முதல் 3.00 மணி வரை |

### எண்ணெய்க்காப்பு

வைரவ அடியார்கள் அனைவரும் பங்குபற்றி அருள்பெற வேண்டுகின்றோம்.

29.01-2001 திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு மேல் 8.00 மணிக்குள்

### மஹா கும்பாபிஷேகம்

இடம்பெற்று, அதனைத் தொடர்ந்து மஹா அபிஷேகம் நடைபெறுவதுடன், தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம்பெற்று

13-03-2001 புதன்கிழமை மஹா சங்காபிஷேகம் நடைபெறும்.

இக் கும்பாபிஷேகப் பெருவிழாவை

பிரதம குரு: ஈச்சமோட்டை ஞானவைரவர் தேவஸ்தான, கிரியாகலாபமணி

**சிவஸ்ரீ திரு. பாலசுப்பிரமணியக் குருக்கள்**

தலைமையில்

சர்வசாதகபோதகர் சிவகாமசுரபி சிவஸ்ரீ கதிர்செல்லப்பாக் குருக்கள் (மாதகல்)

இவர்களுடன் இணைந்து ஆலயக் குரு சிவஸ்ரீ வை. ஜீவநாதக்குருக்கள் அவர்களும், ஏனைய குருமார்களும் நடத்தவுள்ளனர்.

ஆசியுரை: செஞ்சொற் செல்வர் திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்.

(ஆசிரியர், யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்) நிகழ்த்தவுள்ளார்.

ஞான வைரவ அடியார்கள், அன்பர்கள் அனைவரும் வருக! அருள் பெறுக!

நிகரை ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை,
சங்கானை.

(C/14969)

உ

## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் தைமாதம் 12ஆம் நாள் இன்று (25-01-2001) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில்

# - சாலினி உணவகம் -

எமது உணவகத்தை இல.5, பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தியில் திறந்து நடத்த நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து இவ் ஸ்தாபனத்தைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.5, பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.விக்னேஸ்வரன்
குடும்பத்தினர்.
*இணுவில்.(மல்லாகம்)*

(இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் பங்குகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்போடு வேண்டுகின்றோம்)

(83317)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் வருகை விரிவுரையாளர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறும் இந்த நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் இவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் தெரிவித்தார். (க-6)

## வண்டு தாக்கியதால் விபத்து

யாழ்ப்பாணம்,ஜன.25

திடீரென கண்ணுக்குள் வண்டு தாக்கியதால் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் நிலை தடுமாறி வாய்க்காலுக்குள் வீழ்ந்து படுகாயமடைந்தனர்.

சண்டிலிப்பாய் சீரணி சந்திக்கு அண்மையில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் பனிப்புலம் பண்டத்தரிப்பைச் சேர்ந்த பேரின்பநாதன் ஜெகநாதன் (வயது 37), பாலசிங்கம் சிவசங்கர் (வயது 20) ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர். இருவரும் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-6)

## கொடிகாமம் செல்ல அனுமதி மறுப்பு

தென்மராட்சி,ஜன.25

கொடிகாமத்தை அண்டிய பகுதிகளில் ஷெல்கள் வந்து வீழ்ந்ததையடுத்து செவ்வாய்க்கிழமை நண்பகலுடன் வடமராட்சியில் இருந்து கொடிகாமத்திற்கு செல்வதற்கு முள்ளிச் சோதனைச்சாவடியில் அனுமதிக்கப்படவில்லை.

## ஷெல்வீச்சில் காயம்

சாவகச்சேரி,ஜன.25

மிருசுவில் தவசிகுளம் பகுதியில் சைக்கிளில் மட்டை ஏற்றிக் கொண்டிருந்த வேளையில் சுமார் 15 யார் தூரத்தில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் 6 பிள்ளைகளின் தந்தை படுகாயமடைந்தார்.

இயக்கச்சியில் இருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது அல்வாய் கிழக்கில் வசித்துவரும் - வேலுப்பிள்ளை விநாயகம் (வயது 48) என்பவர் கை, கால், கழுத்து, முகம் பகுதிகளில் காயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வாழைத் தோட்டக்காரருக்கு விரைவில் நஷ்டஈடு

வலி.தெற்கு,ஜன.25

அண்மையில் பெய்த மழை, கடும் காற்றுக் காரணமாக இணுவில், மருதனார்மடம், உடுவில் மற்றும் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அநேக இடங்களில் வாழைமரங்கள் முறிந்து பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

சேதமடைந்த வாழைத்தோட்ட செய்கையாளர்களுக்கு நஷ்டஈடு நிவாரணம் வழங்கவென சேத மதிப்பீடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க-152)

## கலந்துரையாடல்

தென்மராட்சி,ஜன.25

பளைப் பிரதேச வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு புலோலியில் இயங்கும் பளைப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

இடம்பெயர்ந்து வலிகாமம், வடமராட்சி ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள பளைப் பகுதி வர்த்தகர்கள் தவறாது இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு வணிகர் மன்றத் தலைவர் வை.சற்குணம் அறிவித்துள்ளார். (ஐ-3-31-117)

## திணைக்களம் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ்.அலுவலகம் கடந்த திங்கள் முதல் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தின் மூன்றாவது மாடிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

எனவே சகல வரி செலுத்துனர்களும் புதிய அலுவலகத்துக்கு வருமாறு அத்திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பி.ஜெயராசா கேட்டுள்ளார். (உ-3)

# களுத்துறைச் சிறையில் வாடும் கைதியின் சாகும்வரையான உண்ணாவிரத அறிவிப்பு

கொழும்பு,ஜன.25

களுத்துறைச் சிறைச்சாலையில் கடந்த இரண்டு வருட காலமாக எதுவித விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதி ஒருவர், தனது விடுதலை கோரி எதிர்வரும் 28 ஆம் திகதிமுதல் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக தெரிவித்துள்ளார். மன்னார்ப் பகுதியைச் சேர்ந்த கணேசபதி சுரேஸ்குமார் என்பவரே இந்தக் கைதி ஆவார். களுத்துறைச் சிறையில் 348 ஆம் இலக்க அறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

1998ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் திகதி மன்னாரில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ள நாள் முதல் இன்றுவரை எதுவித விசாரணைகளும் இன்றி தடுத்துவைக்கப்பட்டிருக்கிறேன். கைதுசெய்யப்பட்ட அன்று கண்கள், கை, கால்கள் கட்டப்பட்டு குண்டான் தடிகளினால் தாக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. 98 ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் திகதி என்னை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது காலவரையறையற்ற தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இதன் பின்னர் ஜனவரி 25 ஆம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றம் செய்தார்கள். அன்று என்னைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுசினர் சந்தித்தபோது எனக்கு நடந்த சித்திரவதைகள் குறித்துக் கூறினேன். அன்றுதான் எனது மனைவி மற்றும் பிள்ளைகளையும் கடைசியாகச் சந்தித்தேன். இன்றுவரை அவர்களைப் பார்த்ததில்லை.

இதைத் தொடர்ந்து ஜனவரி 31 ஆம் திகதி அனுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து களுத்துறைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டேன். களுத்துறைச் சிறைச்சாலையில் எவருடைய கவனிப்பும் இன்றி நிர்க்கதியான நிலையில் விடப்பட்டிருக்கும் என்னிடம் உடுக்க உடுப்பு இல்லை, குளிப்பதற்குச் சோப்பில்லை, அங்கு தரும் சாப்பாடுகள் போதுமானதாகவுமில்லை.

எம்மை விடுதலை செய்யக்கோரி 1998ஆம் ஆண்டு ஜுன் 24 ஆம் திகதி முதல் தடவையாக உண்ணாவிரதம் இருந்தோம். இந்த உண்ணாவிரதம் பலனளிக்காமல் கைவிட்டோம். மீண்டும் இரண்டாம் தடவையாக 1998 ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் திகதி உண்ணாவிரதம் இருந்தோம். அன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் எமது விடுதலை தொடர்பாக அளித்த உறுதி மொழியை அடுத்து உண்ணாவிரதத்தைக் கைவிட்டோம். 1999 ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் திகதி முதல் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்ட போதுதான் எனது வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. 3 மாத காலமாக சட்டத்தரணிகள் எவருமற்ற நிலையில் விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டன.

எனது அவல நிலை குறித்து தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கும் ஜனாதிபதிக்கும் அறிவித்தும் இதுவரை எதுவித பலனும் அளிக்காத நிலையில்தான் நான் 28 ஆம் திகதி முதல் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொள்ள உள்ளேன். (க)

# தென்மராட்சியில் மீள் குடியமர்வு நடவடிக்கை தாமதமாகும்

தென்மராட்சி,ஜன.25

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கை தாமதமாகலாமெனத் தெரியவருகின்றது.

கண்டி வீதியில் சங்கத்தானைக்கு அப்பாலும் ஏனைய சில கிராம அலுவலர் பிரிவுகளிலும் மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள 60கிராம அலுவலர்களிடம் அந்தந்த பிரிவுகளில் உள்ள குடும்பங்களின் விவரங்களை வழங்குமாறு அறிவிக்கப்பட்டபோதிலும் இதுவரை விவரங்களை கிராம அலுவலர்கள் வரணி சிவில் அலுவலகத்தில் ஒப்படைக்கவில்லை என்றும் -

அதனால் மீளக்குடியமர்வு நடவடிக்கை தாமதமடைந்து வருவதாக அங்கு சென்ற பொதுமக்களிடம் தெரிவிக்கப்பட்டதாகத் தெரியவந்தது.

இதேவேளை -

தென்மராட்சி பிரதேச கிராம அலுவலர்களுக்கான கலந்துரையாடலை ஏற்பாடு செய்யுமாறு சிவில் நிர்வாக அதிகாரி தென்மராட்சி பிரதேச செயலருக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக அறியவருகிறது. (க-117)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் விழாவும், கலைமலர் நூல் வெளியீட்டு விழாவும் அண்மையில் நடைபெற்றன.

பிரதம விருந்தினராக பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்களிடமிருந்து கலைமலரின் முதற் பிரதியைக் கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதி பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (ஐ-73)

## காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர் மரணம்

யாழ்ப்பாணம்,ஜன.25

காய்ச்சலினால் பீடிக்கப்பட்டதாகத் தெரிவித்து கடந்த திங்களன்று யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இளைஞன் ஒருவர் அரை மணி நேரத்தில் உயிரிழந்தார்.

சுதுமலை வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த வி.நிரோஜன் (வயது 20) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

இவருக்கு ஒரு மாதத்துக்கு முன்னரே திருமணம் நடைபெற்றதாக உறவினர் ஒருவர் தெரிவித்தார்.

மரண விசாரணைகளின் பின்னர் நேற்று சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (உ-6-15-139)

## சாவகச்சேரி நகரசபையின் 3 அபிவிருத்தித் திட்ட பணிகளுக்கு அங்கீகாரம்

தென்மராட்சி,ஜன.25

சாவகச்சேரி நகர சபையினால் முன்மொழியப்பட்ட 2001ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடைத் திட்டத்தின் கீழ் மூன்று அபிவிருத்தித் திட்டங்களுக்கு தென்மராட்சி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

நகரசபை எல்லைக்குள் போசாக்குத் திட்டத்தினை ஊக்குவித்தலுககு 2லட்சத்து 50ஆயிரம் ரூபாவும் நூலக புத்தகக் கொள்வனவுக்கு 2லட்சத்து 50ஆயிரம் ரூபாவும் அலுவலக தளபாடக் கொள்வனவுக்கு 2லட்சம் ரூபாவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. (க-117-31)

# ஆத்மீகம் - கல்வி - சேவை இவை சங்கமிக்கும் கண்காட்சி

**வடபிராந்திய, ஸ்ரீசத்திய சாயிசேவா இளைஞர் சபையின் ஏற்பாட்டில் 'மனித மேம்பாடுகளினூடாக ஆத்மீகம்' என்ற தலைப்பிலான கண்காட்சி ஒன்று நாளையும் நாளை மறுதினமும் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறுகிறது. அதனை ஒட்டிய சிறு குறிப்பு இது.**

சிறு வயதில் கண்காட்சி ஒன்றிற்குப் போய் வருவது, அதன் பொருளும் தராதரமும் எத்தகையதாக இருப்பினும், ஓர் அனுபவம். தமது பிற்கால வாழ்க்கையின் பரிமாணத்திற்குச் சிந்தனை வித்தைப் பதித்த ஏதாவது ஒரு தகவல் அதில் இருந்தது எனப் பெரியோர்கள் ஒப்புக் கொள்ளும் உண்மை.

கண்காட்சியியல் ஒரு விஞ்ஞானக கலை அதை ஒழுங்கு செய்வதற்கு அறிவு ஆற்றலுடன் பொறுப்புள்ள மனம் வேண்டும்.

சிறுவர்களும் அவர்களின் பெற்றோரும் ஆசிரியர்களும் பார்த்துப் பயனும் பரவசமும் அடையக் கூடிய ஒரு கண்காட்சி யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலை நாளை வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் நடைபெறுகின்றது. அதன் தலைப்பு - 'மனித மேம்பாடுகள் மூலம் ஆத்மீக

**நந்தி**

வாழ்வு' என்ற சீரிய நோக்கம் கொண்டதாகும். இந்தக் கண்காட்சியை ஏற்படுத்தியவர்கள் இளைஞர்கள்; ஸ்ரீ சத்திய சாயி நிறுவனத்தின் இளைஞர் பிரிவைச் சேர்ந்தவர்கள். சிறு வயது தொடக்கம், எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒழுக்கம், வேற்றுமையில் ஒற்றுமை காணல், தன்னலம் கருதாத சேவை என்ற ஆத்மீக சாதனை; இப்படியாகப் பயிற்றப்பட்டவர்கள். எல்லா மதங்களிலும் காணப்படும் அன்பு சார்ந்த தெய்வீக அறிவுரைகளைப் பயின்று 'ஒருவனே கடவுள்' என்ற உண்மையில் ஊன்றி வளர்ந்தவர்கள்.

ஆகவே, 21 ஆம் நூற்றாண்டில் வாழப்போகும் தமது தம்பி தங்கையரின் வாழ்வின் நலனைக் கருதி ஓர் எளிமையான, ஆனால் மனதை விட்டு அகலாத நல்ல செய்திகளைத் தரும் ஒரு கண்காட்சியை அமைத்துள்ளனர்.

ஆத்மீகம், கல்வி, சேவை என்ற மூன்று பிரிவுகளில் கண்காட்சியை அமைத்து, அவற்றின் ஒன்றிணைப்பின் தேவையைக் காட்டியுள்ளார்கள். சிறுவர், இளைஞர் ஆகியோரின் வாழ்வு ஒழுங்காக அமைவதற்கு பெற்றோர், ஆசிரியர், மத குருமார் ஆகியோரின் பங்கு மிகவும் அவசியம் என்பதைக் கண்காட்சி உணர்த்துகிறது. இந்தக் கண்காட்சியை மேலும் விளக்கி நீண்ட கட்டுரை எழுதுவது, கண்காட்சியியலையும் அதை ஏற்படுத்திய இளைஞர்களையும் உங்களையும் அவமதிப்பதாகும். குடும்பம் குடும்பமாக, பாடசாலை பாடசாலையாக போய்ப் பார்த்து வாருங்கள். பயனுள்ள புதிய அனுபவம் இலவசமாகவும் இலேசாகவும் அடையுங்கள். ★

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.25

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 8 இல் சுகாதாரம், உடற்கல்வி ஆகியவற்றைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறும் என்று தென்மராட்சி வலயப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (உ-3)

## பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.25

திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நாளைமறுதினம் சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.(ஐ-10)

## இணைய மூல வானொலிச்சேவை குறித்து மாநாடு

கொழும்பு,ஜன.25

'யுனெஸ்கோ'அமைப்பின ஏற்பாட்டில் சமூக அளவிலான இணைய மூல வானொலிச் சேவை தொடர்பான மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளது.

'இணையம்' மூலம் உள்ளூர் மற்றும் வெளியூர் செய்திகளை சாதாரண மக்களுக்கு வழங்குவதற்கென சேவை மையங்களை உருவாக்குவதே இதன் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## நில அளவையாளர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.25

இந்த வருட அனுமதிப் பத்திரங்களைப் பெற்ற உத்தரவுபெற்ற நில அளவையாளர்களும், விற்பனவு ஆணையாளர்களும் தமது பெயர்களை மாவட்ட நீதிமன்ற பெயர் பட்டியலில் பதிந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து மாவட்ட நீதிமன்றங்களிலும் உள்ள பெயர்ப்பட்டியல்களில் தமது பெயர்களைப் பதிவு செய்ய விரும்பும் நில அளவையாளர்கள், விற்பனவு ஆணையாளர்கள் நீதிமன்ற பதிவாளர்களுடன் தொடர்புகொண்டு -

பதிவுக்கு விண்ணப்பிக்குமாறு நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-6)

## சங்கம் அங்குரார்ப்பணம்

வடமராட்சி,ஜன.25

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்தோர் ஒன்றிணைந்து இடம்பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கம் ஒன்றை அமைக்கவுள்ளனர்.

எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தும்பளையில் இயங்கும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. (ஐ-173)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,ஜன.25

சந்நிதியான் ஆச்சிரம சைவக் கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை அ.குமாரவேல் 'திருமந்திரம்' என்ற தலைப்புத் தொடரில் சொற்பொழிவாற்றுவார்.

நிகழ்வுக்கான அறிமுகவுரையை பேரவையின் உபதலைவர் கசிவகொழுந்து நிகழ்த்துவார். (ஐ-173)

## வலி.தெற்குப் பகுதியில் பாதீனியம் ஒழிப்பு

வலி.தெற்கு,ஜன.25

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அநேக இடங்களில் பாதீனியம் களை ஒழிப்பு நடவடிக்கைகள் ஒரு வாரமாக நடைபெற்றன.

பாதீனிய ஒழிப்பு வார நிகழ்வு உடுவில் கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் பொ.குகநாதன் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, ஏழாலை, குப்பிளான், சுன்னாகம் போன்ற இடங்களில் சிரமதான அடிப்படையில் பாதீனியம் களைகள் பிடுங்கியும், இரசாயன மருந்துகள் விசிறியும் அழிக்கப்பட்டன. (க-152)

# ஐரோப்பாவில் தஞ்சம் கோரும் ஈழத் தமிழர்களின் அவலநிலை!

கைநிறையக் காசு, நாகரிக வாழ்க்கை..... இப்படி நம்மில் பலருக்கு ஐரோப்பியக் கனவுகள் உண்டு. இது இலகுவில் எட்டிவிடும் ஒன்றா?

83 ஜூலைக் கலவரத்தையடுத்து வந்த சில வருடங்களில் இந்தக் கனவு சுலபமாக நனவாகிக்கொண்டிருந்தது உண்மைதான்.

ஆனால் இன்று ஐரோப்பிய நாடு ஒன்றில் தஞ்சம் பெற்றுவிடலாம் என்று செல்லும் நம்மவர்க்கு கைக்கெட்டியது வாய்க்கெட்டாத நிலைதான்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பதைப்போல ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஜேர்மனியில் தஞ்சம் கேட்டுச் செல்பவர்களின் நிலை நமக்கு ஐரோப்பாவின் நிலைமையை உணர்த்தும்.

80களின் இறுதிவரை தஞ்சமென்று சென்ற இலங்கையரை அரவணைத்துக் கொண்டது மேற்கு ஜேர்மனி.

அங்கு நிலவிய தொழிலாளர் பற்றாக்குறை இலங்கைத் தமிழர்களுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் இருந்தது.

சலிக்காது வேலைபார்த்து சம்பாதித்துக்கொண்டார்கள். 1989ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கம்யூனிச ஆட்சியின் கீழ் இருந்த கிழக்கு ஜேர்மனியும் வல்லரசாகத் திகழ்ந்த மேற்கு ஜேர்மனியும் ஒன்றாக இணைந்தன. அன்றுடன் இலங்கைத் தமிழர்களுக்கு மேற்கு ஜேர்மனியில் நிலவிய வசந்த காலம் முடிவுற்றது.

எம்மவர்களின் இடங்களை கம்யூனிஸ ஆட்சிக்குள் முடங்கிக் கிடந்த கிழக்கு ஜேர்மனியர்கள் பிடித்துக் கொண்டனர்.

சுருக்கமாகச் சொன்னால் இலங்கை அகதிகளைக் கவனிப்பதைவிட அகதிகளைப்போல் இருந்த கிழக்கு ஜேர்மனியர்களைப் பராமரிக்க வேண்டிய கட்டாயம் மேற்கு ஜேர்மனிக்கு ஏற்பட்டது. இன்றுவரை தொடரும் இந்த நிலையை விட்டு தற்போது அங்கு செல்லும் இலங் கைத் தமிழர்களின் நிலைமையைப் பார்ப்போம்.

நேரடியாக ஜேர்மனிக்குள் விமானம் மூலம் நுழைந்து கடவுச்சீட்டைக் கிழித்துவிட்டு நுழையும் காலம் மலையேறிவிட்டது.

இப்போது ஜேர்மனிக்குள் செல்லும் 90 சதவீதமான இலங்கையர்கள் போலாந்து, செக் குடியரசு ஆகிய நாடுகளின் வழியாக நுழைகிறார்கள்.

இவர்களை எல்லை தாண்டி அழைத்துச் செல்வதற்காகவே பல சட்ட விரோத குழுக்கள் இயங்குகின்றன.

பாரிய 'கொன்டெயினர்கள்' மற்றும பஸ்களின் அடியில் அமைக்கப்பட்ட ரகசியப் பெட்டி அறைகள் ஆகியவற்றுக்குள் நம்மவர்களைத் 'திணித்து' எல்லை தாண்டி ஜேர்மனிக்குள் இந்தக் குழுக்கள் கொண்டு சென்றுவிடுகின்றன. இதற்காக கணிசமான தொகைப் பணத்தையும் கறந்துவிடுகின்றன.

இப்படி எல்லை தாண்டும் போது "கொன்டெயினர்"களுக்குள் மூச்சுத் திணறி இறந்தவர்களும் உண்டு.

எல்லைப்புறக் காவல்படைச் சோதனை இதைவிட மோசம். வாகனத்தில் வெளிப்படையாகச் செல்பவர்களை இறக்கிவிட்டு சக்தி வாய்ந்த மின்சாரத்தை வாகனத்தில் பாய்ச்சுவார்கள். மறைந்திருப்பவர்களின் கதி நாம் சொல்லத் தேவையில்லை.

இப்படி எல்லைதாண்டுபவர்கள் இளம் பெண்களாயிருந்தால்... எழுத கை நடுங்குகிறது. புரிந்து கொள்ளுங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டு ஜேர்மனிக்குள் நுழைந்தாலும் சிக்கல் தீர்ந்துவிடாது. ஜேர்மனிய எல்லையில் இருந்து 50கிலோ மீற்றர்களுக்குள் நுழைந்தவர்கள் அதிகாரிகளிடம் சிக்கிக் கொண்டால் அவர்கள் நாடு கடத்தப்படுவார்கள்.

இதையும் மீறி ஜேர்மனிக்குள் நுழைந்த பிறகு ஜேர்மனிய அதிகாரிகளின் சரமாரியான கேள்விகளை எதிர்கொள்ள வேண்டும்.

இலங்கையை விட்டு வெளியேறிய காரணம், கொழும்பு வந்த விதம், கொழும்பில் தங்கியிருந்தபோது நடந்தவை, ஜேர்மனிக்குள் நுழைந்த விதம், இப்படி பல விளக்கங்களை அளிக்க வேண்டும். இலங்கையில் தமிழர்கள் எவ்வளவோ பேர் வாழ்ந்து கொண்டிருக்க உங்களுக்கு மட்டும் அங்கு ஏன் வாழ முடியாது? இயக்கங்களாலோ, ராணுவத்தாலோ, ஆபத்து என்றால் கொழும்புக்கு எப்படி வந்தீர்கள்? கொழும்பில் ஏன் உங்களால் தங்கி வாழ முடியாது? அகதியான நீங்கள் பெரும் தொகைச் செலவு செய்து ஜேர்மனிக்கு வந்தது எப்படி? என்பன போன்ற ஜேர்மனிய அதிகாரிகளின் குறுக்குக் கேள்விகள் உங்களை விழி பிதுங்க வைக்கும்.

உண்மையாக நீங்கள் தஞ்சமடைய வந்தவர்களா? அல்லது ஆடம்பர வாழ்வை நாடிச் சென்றவர்களா? என்பதில் அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகத்தை தீர்ப்பதாக உங்கள் பதில்கள் அமைய வேண்டும்.

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கிடைப்பதானால் நீங்கள்......

✪ ராணுவம் அல்லது ஏதாவது ஓர் இயக்கத்தால் நேரடியாகப் பாதிப்படைந்தவராகவோ அல்லது தேடப்படுபவராகவோ இருக்கலாம்.

✪ நேரடியாக அரசியலில் ஈடுபட்டவராக இருக்கலாம்.

✪ கைதாகி சிறையில் அடைக்கப்பட்டவராக இருக்கலாம். (மீண்டும் கைதுசெய்யப்படக்கூடும் என நிரூபிக்க வேண்டும்.)

✪ படையினரால் அல்லது ஏதாவது இயக்கத்தால் உங்கள் நேரடி உறவினர் ஒருவர் பாதிக்கப்பட்டோ அல்லது தேடப்படுபவராகவோ இருந்து அதனால் உங்களுக்கு இலங்கையில் வாழ முடியாத சூழ்நிலை உருவாகி இருக்கலாம்.

(உ+ம்- உங்கள் சகோதரர் படையினரால் தேடப்படுபவராக இருந்தால் அவர் கிடைக்காததால் உங்களை கைதுசெய்யும் நிலைமை.)

மேற்கூறிய காரணங்களில் ஒன்றை நீங்கள் ஆதாரபூர்வமாக நிரூபித்தால் மட்டுமே அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இல்லாவிட்டால் ஆடம்பர வாழ்வை நாடியே நீங்கள் ஜேர்மனி வந்ததாக் கருதி நாடுகடத்தப்படுவீர்கள்.

ஜேர்மனியைத் தவிர வேறு ஏதாவது ஓர் ஐரோப்பிய நாடு ஒன்றில் நீங்கள் அரசியல் தஞ்சம் கோரிவிட்டு அங்கிருந்து ஜேர்மனிக்குள் வந்து இங்கும் தஞ்சம் கேட்டாலும் நாடு கடத்தல்தான் உங்கள் முடிவு.

சமீபத்தில் தஞ்சம்கோரி உண்ணாவிரதம் இருந்த நால்வரை நாடு கடத்தியதற்குக் காரணம் அவர்கள் பிரிட்டனிலும் அரசியல் தஞ்சத்துக்கு விண்ணப்பித்திருந்தார்களாம்.

ஐரோப்பிய நாடுகளிடையேயான கணனித் தகவல் பரிமாற்றம், புத்திசாலித்தனமாக இரண்டு, மூன்று நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியிருப்பவர்களுக்கு நந்தியாக குறுக்கே நின்று நம்மவர்களை நாடு கடத்துகிறது.

ஜேர்மனிக்குள் நுழைந்தாலே தஞ்சம் கிடைக்கும் சூழ்நிலை மாறுவதற்கு அங்கு அரசியல் தஞ்சம் பெற்ற நம்மவர்களே காரணம் என்றால் வியப்பாக இருக்கிறது அல்லவா? ஆனால் அதுதான் உண்மை.

இலங்கையில் இராணுவத்தால் உயிருக்கு ஆபத்து என்று கூறி ஜேர்மனியில் அரசியல் தஞ்சமடைந்த பலர் அங்கு நிரந்தர குடியுரிமை பெற்ற உடனேயே வேறு கடவுச்சீட்டில் இலங்கைவந்து - அதுவும் வடக்கு - கிழக்கில் தமது சொந்த ஊர்களில் திருமணம் முடித்து ஜேர்மனி திரும்பினார்கள்.

இன்னும் சிலர் சிங்கப்பூருக்குப் பெண்ணை அழைத்து அங்குள்ள இலங்கைத் தூதரகத்தில் திருமணப் பதிவை விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

கட்டுநாயகா விமான நிலைய அதிகாரிகளும் ஜேர்மனியத் தூதரக அதிகாரிகளும் திருமணப் புகைப் படங்கள் போன்ற ஆதாரங்களைத் திரட்டி அனுப்பினார்கள் விழித்துக் கொண்டது ஜேர்மனிய அரசு.

இலங்கையில் இராணுவத்தால் தேடப்படுபவர்கள் என்று கூறி தஞ்சமடைந்த பலர் இலங்கைக்கு அதுவும் சொந்த ஊருக்குச் சென்றிருப்பதும் வேறு சிலர் சிங்கப்பூரில் இலங்கைத் தூதரகத்திலேயே தமது திருமணத்தைப் பதிவு செய்துகொண்டதும ஜேர்மனிய அதிகாரிகளை உசுப்பி விட்டது.

இதிலிருந்து இலங்கைத் தமிழர்கள் பலர் உண்மையாகவே ஆபத்தில்லாத போதும் ஆடம்பர வாழ்வுக்காகத் தஞ்சம் கோருவதாக அவர்கள் முடிவு கட்டினார்கள்.

ஆனாலும் இப்போது மனிதாபிமான அடிப்படையில் அரசியல் தஞ்சங்களை அவர்கள் அணுகிவருகிறார்கள்.

இதன்படி, 15 வயதில் இருந்து 30 வயதுக்குட்பட்டவர்களுக்கு அதுவும் பெண்களுக்கு தஞ்சம் வழங்குவதில் ஜேர்மனிய அதிகாரிகள் மென்போக்கை கடைப் பிடிக்கிறார்கள.

அதிலும் ஆணோ பெண்ணோ தமது சுய முடிவினால் இலங்கையை விட்டு வெளியேறியிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

சமீபத்தில் இங்கிருந்து சென்ற இளம் பெண் ஒருவர் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாக இலங்கையை விட்டு வெளியேறி ஜேர்மனியில் தஞ்சம் கோருவதாகத் தெரிவித்திருந்தார். இதனை ஏற்றுக் கொண்ட ஜேர்மனிய அதிகாரிகள் இந்த அச்சத்தின் காரணமாக் தாயார் தான் தன்னை ஜேர்மனிக்கு அனுப்ப முடிவெடுத்ததாக அப்பெண் கூறியதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர்.

பலாத்காரம் குறித்து அச்சம் இல்லாத நிலையில் மகளின் சொகுசு வாழ்க்கை கருதியே தாயார் அப்பெண்ணை ஜேர்மனிக்கு அனுப்பியதாகக் கருதி அவர் நாடு கடத்தப்பட்டார்.

தற்போது 40 வயதைத் தாண்டியவர்கள் அரசியல் தஞ்சம் கோரி



**கொடிகாமத்தை பிறப்பிடமாகக் கொண்டவர் திரு.ராமச்சந்திரன் 83இல் கலவரத்தின் பின்னர் ஜேர்மனி சென்று குடியுரிமை பெற்ற இவர் அங்கு சட்டப் படிப்பை முடித்துச் சட்டத்தரணியானார்.**

**தற்போது ஜேர்மன் அரசின் முடிக்குரிய மொழி பெயர்ப்பாளர் பதவி வகிக்கும் இவர். இலங்கையில் தமிழர் நிலைகுறித்து திறனாய்வு செய்து ஜேர்மனிக்கு அறிக்கைகள் தாக்கல் செய்து வருகிறார்.**

**திறனாய்வுப் பணிக்காகச் சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்த அவரைச் சந்தித்துப்பெற்ற தகவல்களே இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.**

ஜேர்மனிக்குச் செல்வது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையாகிவிடுகிறது.

தரை மார்க்கமாக ஜேர்மனிக்குள் நுழைபவர்களுக்குத்தான் இவ்வளவு கஷ்டம் என்றில்லை. ஆசிய நாடுகளில் ஏதாவது ஒன்றில் இருந்து விமானம் மூலம் சென்று ஜேர்மனிய விமான நிலையத்தில் இறங்குபவர்களும் விசாரணையை எதிர்கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் ஒருவாறு சமாளித்து அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்தால் அதன் மீதான முடிவு 3 மாதங்களுக்குள் தெரிவிக்கப்படும்.

**பாமரன்**

விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் நிர்வாக நீதிமன்றம் ஒன்றில் அரசியல் தஞ்சம் தரும்படி வழக்குத் தாக்கல் செய்யலாம்.

அப்போது உங்கள் இலங்கைக் கடவுச்சீட்டில் ஜேர்மனியில் தங்குவதற்கான 2 வருட "விசா" வழங்கப்படும்.

வழக்கு நடத்துவதற்கும் "விசா" பெறுவதற்கும் பணம் செலவழிக்க முடிந்தால் மட்டுமே இது சாத்தியம். அங்கு உழைக்கும் பணம் அத்தனையையும் வழக்குக்காகச் செலவழிப்பவர்களும் உண்டு.

இதன் பின்னர் வழக்கு தோற்று உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு நீங்கள் நாடு கடத்தப்படும் நிலையும் ஏற்படலாம்.

இப்படி வழக்கை நடத்திக் கொண்டு 2 வருடங்களுக்கு ஒரு முறை விசாவைப் புதுப்பித்துக் கொண்டிருப்பவர்கள் ஏராளம். இவர்களில் 8 வருடங்கள் விசாவைப் புதுப்பித்து வருபவர்களுக்கு 8 ஆவது வருட முடிவில் குடியுரிமை பெறும் வாய்ப்பு கிட்டலாம்.

இதே சமயம் "ஸ்பொன்சா"" பெற்று ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்பவர்களும் உண்டு. இவர்களில் முதியவர்கள் மிக விரைவில் இறநது விடுவதாக ஆய்வுகளில் இருந்து தெரியவருகிறது.

அங்கு நிலவும் காலநிலையே இதற்கு முக்கிய காரணமாகும். அத்துடன் வீட்டுக்குள்ளேயே வயதானவர்கள் அடைபட்டது போல் இருக்க வேண்டியிருப்பதால் மன அழுத்தங்களாலும் அவர்கள் பெருமளவில் பாதிப்படைகிறார்கள்.

எப்படியோ ஐரோப்பியக் கனவுகளுடன் ஜேர்மனிக்குள் நுழைந்து குடியுரிமை பெறுவதுடன் சிக்கல்கள் தீர்வதில்லை.

மேலை நாட்டவரிடம் ஆழப்பதிந்து கிடக்கும் இனத்துவேஷத்துக்கு நம்மவர்கள் பழகிக்கொள்ள வேண்டும். அதற்கு தன்மானம் போன்ற சில விடயங்களைத் தளர்த்த வேண்டும்.

அதேசமயம் அவர்களது பொறாமையும் நம்மைத் தாக்கக்கூடும்.

காரணம், அங்கு பிறந்து கல்வி கற்கும் நம்மவர்களின் பிள்ளைகள் கல்வியில் ஜேர்மனியருடன் போட்டியிட்டு வெல்லும் நிலையில் உள்ளனர். அத்துடன் அகதிகளாக வந்து ஜேர்மனியரைவிட ஆடம்பரமாக இலங்கைத் தமிழர்கள் வாழ்வதும் அவர்கள் கண்களை உறுத்துகிறது.

ஜேர்மனியில் மட்டுமல்லாது ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் இலங்கைத் தமிழர்களின் நிலை ஏறக்குறைய இதுவே.

இனித் தாய் மண்ணை விட்டுச் செல்வதா இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டியவர்கள் நீங்களே! ☆

## தமிழ் இனத்துக்கு தலை குனிவு!

ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம் பெற்று வாழும் நம்மவர்கள் மீது வெள்ளையர்கள் பொதுவாகச் சில குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகிறார்கள்.

மது போதையில் ஒழுக்கசீனமாக நடந்து கொள்வதும், வாகன விபத்துக்களை ஏற்படுத்துவதும், பொது இடங்களில் கூட சுத்தத்தைக் கடைப் பிடிக்காதது, அடுத்தவர்களின் சுதந்திரத்தைக் கெடுப்பது, ஆகிய குற்றச் சாட்டுக்களுக்கு ஐரோப்பாவில் வாழும் நம்மவர்கள இலக்காகியுள்ளனர். இது வருந்தத்தக்கதே. சிலர் செய்யும் இத்தகைய தவறுகளால் ஒட்டுமொத்த ஈழத்தமிழினமே மேலை நாட்டவர்கள மத்தியில் தலைகுனிந்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

# பீரங்கி,ஷெல் மழைக்கு மத்தியிலும் தமிழ்ப்பணி புரிகிறார் சண்முகதாஸ்

## மணி விழாவில் புகழாரம்

நெல்லியடி,ஜன.24

"பிரங்கி முழங்கி,ஷெல் மழை பொழிய விமானக்குண்டு வீச்சின் மத்தியிலும் தமிழ்த் தொண்டுக்காகப் பணிபுரியும் பேராசிரியர் சண்முகதாஸின் கல்விச் சேவை இக் காலகட்டத்தில் ஒரு பரம சாதனையாகும்,"

இவ்வாறு வடமராட்சி மணிவிழா சபையினரால் நடத்தப்பட்ட பேராசிரியர் ஆசண்முகதாஸின் மணி விழாவின்போது,வாழ்த்துரை வழங்கிய யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் கே.எஸ்.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

இவ்விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் ஹாட்லிக்கல்லூரி ஆசிரியர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெற்றது.

விழா ஆரம்பத்தில் மணிவிழா நாயகர் நாதஸ்வர கானமிர்தத்துடன் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்திலிருந்து விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருப்பணிச் சபைத் தலைவர் ஆசிவநாதன், நெல்லியடி சனசமூக நிலையத் தலைவர் சிநற்குணசிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் 'சங்கீத பூஷணம்' செ.குமாரசாமி தமிழ்த் தாய் வாழ்த்து இசைத்தார்.

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ கௌரிபாலக் குருக்கள், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத் தலைவி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள்.

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அதிபர் கிநடராசா வரவேற்புரை நிகழ்த்த மணிவிழா நாயகருக்கு கௌரவிப்பும் வாழ்த்துரையும் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வழங்கினார்.

கலைப்பீடாதிபதி தமது வாழ்த்துரையில் மேலும் தெரிவித்ததாவது:-

அலை அலையாக வரும் துன்பங்களை இன்று நாம் எதிர்கொண்டு வாழகிறோம். புதுப்புது ஓலங்கள்,வானமே வளைந்து ஒரு சோககீதம் இசைக்கின்றது.

பட்டம் பெற்று ஆராய்ச்சி செய்த பலர் இன்று லண்டன்,கனடாவில் உள்ளனர்.மனித உயிர் மிக மலிந்த பொருளாக உள்ளது.இயமன் யாழ்ப்பாணத்தில் கூடாரம் அடித்துள்ள இந்தச் சூழ்நிலையில் தமிழுக்குத் தொண்டு செய்யும் பேராசிரியர் சண்முகதாஸ் மண்ணின் மகனாகப் போற்ற வேண்டியவராவார்.

தமிழுக்காக நாம் பாடுபடுவது (7ஆம் பக்கம் பார்க்க)

# ஈராண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
10
*
04
*
1940



ஆண்டவன் திருவடியில்
18
*
01
*
1999

## அமரர் Dr.நடராசா சுந்தரலிங்கம்

திதி:- 25.01.2001 (வியாழக்கிழமை) பிரதமைதிதி

குடும்பத்தின் ஒளிதருவிளக்காய்
குவலயம் போற்ற வாழ்ந்த
எம் அன்புத் தந்தையே!
வசந்தத்தின் வாசலிலே ஆவலுடன் நாம் நிற்க
காலன் அவன் பாசவலை எம் ஒளிவிளக்கை சூழ்ந்ததுவே!
காலத்தின் கோலமதால் காலன் இட்ட கட்டளையால்
நிழல் தந்த விருட்சம் வேரோடு சாய்ந்ததுவே!
நெஞ்சங்கள் யாவும் நிசப்தமாகிப் போனதுவே
ஊமையாய் அழுகின்றோம் உரிமை உறவுகள் நாம்
அப்பா! உங்கள் இலட்சியக் கனவுகள்
நனவாகும் வேளைதனில் அதைக் காண
நீங்கள் இங்கு இல்லை அப்பா!
அயராது உழைக்கின்றோம் உங்கள் விழுதுகள்
நாங்கள் இங்கே
உங்கள் கனவுகள் நனவாகும் நாள்
வெகு தூரமில்லை அப்பா!
அதைக்காண எப்போ அப்பா வருவீர்கள்?
கனவுகள் கண்ணீரால் நனையத் தேடுகின்றோம்
உங்கள் வரவை
ஈராண்டுகள் என்ன இறுதிவரை உங்கள்
நினைவில் வாடி நிற்கும் பூக்களப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நிரந்தர முகவரி :*
புகையிரத வீதி,மாவிட்டபுரம்
தெல்லிப்பழை.
*தற்போதைய முகவரி :*
மஞ்சத்தடி, இணுவில். (C/14933)

என்றும் உங்கள் நினைவால்
துயருற்றிருக்கும்
**தாய், மனைவி, பிள்ளைகள்**

---

ஓம் வீராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

# முதலாம் ஆண்டு நீங்காத நினைவுகள்



மலர்வு:**1925.08.24** உதிர்வு:**2000.02.06**

அமரர்

## செல்லையா கணபதிப்பிள்ளைப் பத்தர்

திதி : பிரதமை - 2001.01.25 வியாழக்கிழமை

அன்புள்ளம் கொண்ட அப்பா!
குடும்பத்தின் ஒளி விளக்காய் எம்மை
பண்போடு அறிவூட்டி வளர்த்து எமைக் காத்து நின்றீர்!
இல்லம் பொலியத் தெய்வமென
மாண்புடன் வாழ்ந்தீர்!
உங்கள் ஆத்மா இன்புற்றிருக்க
இறைவனை இறைஞ்சுகின்றோம்!
ஆத்மா சாந்தி அடைக!

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

*இல: 13, அரசடி ஒழுங்கை,*
*தட்டாதெரு,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (83246)

*அமரரின் பிரிவால் துயருறும்:*
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

---

# வீதி புனரமைக்க நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்ஜன.25

யாழ்.மாநகர சபையினால் இவ்வருடத்தில் ஒரு கோடியே 90 லட்சம் ரூபா செலவில் வீதிகள் புனரமைப்பு மற்றும் சீரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மாநகர சபை எல்லைக்குள் உள்ள 71 வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கும் 12 வீதிகளை மறு சீரமைப்புச் செய்வதற்கும் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (உ-5)

# திருவடி வழிபாடு

யாழ்ப்பாணம்,ஜன.25

திருக்கேதீஸ்வரம், திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் 13 ஆவது ஆண்டு குருபூசை தினத்தை முன்னிட்டு சுவாமிகளின் திருவடி வழிபாடு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி மாலை 5 மணிக்கு சி.தியாகராசா தலைமையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி, உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்தில்லை நடராஜாவும்,சிறப்பு விருந்தினராக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ-10)

# பீரங்கி, ஷெல்....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகக் குறைந்து செல்லும் இந்த வேளையில், தமிழை ஆய்வுசெய்ய - தமிழ் கலாசாரத்தை வளர்க்க - இந்த மணிவிழாவில் மக்கள் பெருமளவில் கலந்து கொண்டது பெரு மகிழ்வைத் தருகிறது - என்றார்.

பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா தமது வாழ்த்துரையில்:-

தமிழ் இலக்கியம் மிகச் சுமை என எண்ணிய மாணவர்களுக்கு மிகச் சுவையாக தமிழை போதித்து வரும் பேராசிரியர் சண்முகதாஸின் மிக உச்சமான பணியினால் இன்று மிகச் சிறந்த மாணாக்கர் பரம்பரை உருவாகிவருகிறது.

மற்றவரின் குறையைச் சுமந்து கொண்டு செல்லவிரும்பாத பேராசிரியர் அறத்தின் வழி வாழ்பவர். அவரது நற்பணிக்கு துணை நிற்கும் பேராசிரியரின் துணைவியாரும் உலகம் போற்றும் அறப்பணியில் இருந்து கொண்டு ஜப்பானிய மொழிக்கும் - தமிழ்மொழிக்கும் ஒரு தொடர்புள்ளது என்பதை நிரூபித்துள்ளார் - என்று கூறினார்.

வரலாற்றுத்துறை விரிவுரையாளர் பேராசிரியர் கிருஷ்ணராசா தமது வாழ்த்துரையில்:-

யாழ்குடாநாட்டின் பண்பாட்டு விழுமியங்களை அழியவிடாது பாதுகாத்துக் கொள்ளவேண்டும் யாழ்ப்பாணத்து வர்த்தகர்கள் வர்த்தக நோக்கில் வாழும் இன்றைய நிலையில், வடமராட்சி வர்த்தகர்கள் தமது பண்பாட்டை வளர்த்து வருவது இந்த மணிவிழா மூலம் புலனாகின்றது. சர்வதேசம் முழுவதும் தமிழைப் பெருமைப்படுத்தி வரும் பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதிகளுக்கு எடுக்கப்பட்ட இவ்விழா தமிழ் மக்கள் வரலாற்றில் பதியும் விழாவாகும் - என்றார்.

பேராசிரியர் நா.ஞானகுமாரன், முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம், சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.கிருஷ்ணராசா,வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், முன்னாள் விரிவுரையாளர் பண்டிதர் க.சச்சிதானந்தம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மணிவிழா மலர் வெளியீட்டுரையை சைவாபிவிருத்திச் சங்கத் தலைவர் சோ.பத்மநாதன் நிகழ்த்தினார். மணிவிழாச் சபைத் தலைவர் மன்னவன் கந்தப்பு முதன்மைப் பிரதியை மணிவிழா நாயகனுக்கு வழங்கியதையடுத்து நூற்றுக்கணக்கானோர் சிறப்புப் பிரதிகளைப் பெற்றனர்.

மணிவிழா மலர் சிறப்புரையை 'பேராசிரியரின் தமிழ்ப்பணி' என்ற தலைப்பில் கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும் -

'பேராசிரியரின் அறப்பணி' என்ற தலைப்பில் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனும் நிகழ்த்தினார்கள்.

மணிவிழா நாயகர்களான பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் பதிலுரை வழங்கினர்.

இறுதியாக பட்டிமண்டபம், நாட்டிய நாடகம், வில்லிசை போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

---

தெல்லிப்பழை, அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள்

# கிணற்றடிப் பிள்ளையார் கோயில்



## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

பிரதிஷ்டா பிரதம குரு பிரதிஷ்டா சிரோன்மணி
வேதாகம கிரியாபானு
**சிவஸ்ரீ சோ.சி.பிரணதார்த்திஹரக் குருக்கள்** தலைமையில்

கிரியைகள் **25.01.2001** தொடங்கி **29.01.2001** வரை கும்பாபிஷேம் நடைபெற உள்ளது.

**27.01.2001 பகல் 12.00 மணிக்குப்** பக்தர்கள், எண்ணெய்க் காப்பு ஆரம்பமாகி **28.01.2001 பகல் 12.00 மணியுடன்** பூர்த்தியாகும்.

**29.01.2001 காலை 6.00 மணிக்குக்** கிரியைகள் ஆரம்பமாகி **7.31 மணிமுதல் 8.06 மணி** வரையுள்ள சுபநேரத்தில் *ஸ்தூபிகள் அபிஷேகம், மஹா கும்பாபிஷேகம்* நடைபெறவுள்ளன.

*ஆசியுரை:* **சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் J.P**

*அருளுரை:* நல்லை ஆதீன முதல்வர்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**

*சிறப்புரை:* **திரு.சீ.விநாசித்தம்பிப் புலவர்,**
கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை
**தங்கம்மா அப்பாக்குட்டி J.P,**
செஞ்சொற்செல்வர் **திரு.ஆறு.திருமுருகன்.**

விநாயக அடியார்கள் அனைவரும் வருகை தந்து மஹா கும்பாபிஷேகத்தை தரிசித்து விநாயகரின் அருளைப் பெறவேண்டி நிற்கின்றோம்.

- **நிர்வாக சபையினர்**


விளம்பர அன்பளிப்பு:-

# சிவன் நகை மாடம்

தங்க நகை வியாபாரம்

*சிறீ பில்டிங்,*
*காங்கேசன்துறை வீதி,*
*மல்லாகம்.* (83242)

உரிமையாளர்
நா.சிவராசா (ராசன்)


---

வெற்றுச் சாக்கு, வெற்றுப் பைகளுக்கான

# கூறுவிலை கோரல்

எமது சங்கத்தில் 68 கிலோ கொண்ட பெரிய வெற்றுச் சாக்குகளும், 50 கிலோ கொண்ட சிறிய வெற்றுச் சாக்குகளும், வெற்றுப் பைகளும் விற்பனைக்கு உண்டு. பெற்றுக் கொள்ள விரும்புவோர் வெற்றுப் பொருள்களை சங்க வேலை நாள்களில் நேரடியாகப் பார்வையிட்டு கூறுவிலையினைச் சமர்ப்பிக்கலாம். மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 1000/- செலுத்த வேண்டும்.

*முடிவு திகதி:-* **05.02.2001ஆம் திகதி பகல் 12.00 மணிவரை**யும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்.
சங்கானை ப.நோ.கூ.சங்கம்,
சங்கானை.

(C/14929)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10
-
04
-
1944



மறைவு
06
-
02
-
2000

## அமரர் சின்னன் பொன்னம்பலம்

திதி: 25.01.2001

எங்கள் அன்புத் தந்தையே! எங்கள் குலவிளக்கே!
ஏனையா எம்மை விட்டுச் சென்றாய்!
எம் செல்வமே!
ஓராண்டா? ஈராண்டா? இல்லை
ஓராயிரம் ஆண்டு சென்றாலும் மறையாது உம் நினைவு
எங்கள் நெஞ்சை விட்டு அகலாது தந்தையே!
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*செ.லோகராசா,*
*கட்டுடை,*
*மானிப்பாய்.* (83249)

மனைவி, மகள், மகன்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

உ

ஓம் ஸ்ரீ நாகவரத நாராயணாய நம

# மிருதங்க அரங்கேற்றம்



## செல்வன் திருச்செகநாதன் வரோதயன்

(மிருதங்க ஆசிரிய தராதரம் முதலாம் பிரிவு, கலாவித்தகர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட
முதலாம் வருட மாணவன்)

காலம்: **28-01-2001** ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி.
இடம்: **அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம் அன்னசுரபி மண்டபம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைக்கழக நடனத்துறை
மிருதங்க விரிவுரையாளர்
**லயஞானவாரிதி திரு.சி.மகேந்திரன்** அவர்களின்
மாணவன்
**செல்வன் திருச்செகநாதன் வரோதயன்**
அவர்களின்
*மிருதங்க அரங்கேற்ற நிகழ்வு*

தலைவர்:
பேராசிரியர் திரு. இராசரத்தினம் குமாரவடிவேல்
(B.SC. (Hons) Ph.D. (BRISTOL) அவர்கள்
பீடாதிபதி, விஞ்ஞானபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பிரதம விருந்தினர்கள்:
பேராசிரியர் திரு.பொன்.பாலசுந்தரம்பிள்ளை
(B.A. (Hons) CEY. Ph.D. DURHAM) அவர்கள்
(துணைவேந்தர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ்
B.A.(CEY) Ph.D (EDIN) அவர்கள்
பீடாதிபதி, உயர்கல்வி பட்டப்படிப்பின் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### நிகழ்ச்சி நிரல்

1. *மங்கள விளக்கேற்றல்*
2. தேவாரம். செல்வி தி. வரதவாணி அவர்கள்
(கலைப்பீட மாணவி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
3. *வரவேற்புரை* - திரு. ஐ.கோ. சந்திரசேகரம் அவர்கள்
(மார்ஷல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
4. *தலைவர் உரை*
5. *ஆசியுரை*
ஸ்ரீலஸ்ரீ தேசிகஞானசம்பந்த சோமசுந்தர பராமாசாரிய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்)
அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் அவர்கள்
(தலைவர், இந்துசமயப் பேரவை)
6. *பிரதம விருந்தினர்கள் வாழ்த்துரை*
7. குருவணக்கம்
8. கலைஞர்களைக் கௌரவித்தல்
9. இசையரங்கு
10. *மதிப்பீட்டுரை*
கலாபூஷணம் திரு.சு.கணபதிப்பிள்ளை அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
11. *சிறப்புரை* - திரு. க. சிவாஜி B.A. அவர்கள்
(அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
செஞ்சொற் செல்வர் திரு.ஆறு. திருமுருகன் அவர்கள்
(ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
சிவஞானி சி. சத்திக்கிரீவன் அவர்கள்
(கௌரவ செயலாளர், இந்து சமயப் பேரவை)
12. *நன்றியுரை* - திரு. த. குணபாலசிங்கம் J.P. அவர்கள்
(பிரதம நிர்வாகஸ்தர், ஸ்ரீ நாகவரதர் தேவஸ்தானம்)

பாட்டு: *இசைக்கலைமணி திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன்* அவர்கள்
(இசை ஆசிரியர், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி)
உடன் பாடுபவர்: செல்வி ஜனனி நல்லைநாதன் அவர்கள்
வயலின்: இசைஞானத் திலகம் திரு. உ. இராதாகிருஷ்ணன் அவர்கள்
மிருதங்கம்: கலாவித்தகர் செல்வன் தி. வரோதயன் அவர்கள்
கஞ்சிரா: *சங்கீதரத்தினம் திரு.மா.சிதம்பரநாதன்* அவர்கள்
(நுண்கலைக்கழக மிருதங்க விரிவுரையாளர், இசைத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)
கடம்: செல்வன் ம. லோகேந்திரன் அவர்கள்
தம்புரா: சங்கீத பூஷணம் கே.ஆர். நடராஜா அவர்கள்

பெரியோர்கள், கலைஞர்கள், நண்பர்கள், அன்பர்கள், உறவினர்கள்
அனைவரும் வருகை தந்து சிறப்பித்து கலைஞனை
வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
நன்றி

- இங்ஙனம்,
திரு.திருமதி திருச்செகநாதன் குடும்பத்தினர்
அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் (பேரன்)

நாகேஸ்வரம்,
அளவெட்டி.

(83298)


## கன்னாதிட்டியில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்ப்பாணம் திருவண்ணைநகர் கன்னாதிட்டி காளியம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகத்தின் முன்னோடியாக கடந்த திங்கட்கிழமை முதல் யந்திர கிரியைகள் ஆரம்பமாகியுள்ளன.

எதிர்வரும் 7ஆம் திகதி புதன் கிழமை கும்பாபிஷேகம் நடைபெறும். 6ஆம் திகதி காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை எண்ணெய்க் காப்பு இடம்பெறும். (க)

## யாழ்நகரில் குறுக்கு வீதி வீட்டில் திருடர் கைவரிசை

அரியாலை,ஜன.25

ஊரடங்குச் சட்ட நேரத்தில் யாழ் நகரப் பகுதியிலுள்ள இரண்டு வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

யாழ்நகர் இரண்டாம் குறுக்கு வீதியில் ஞானசீலன் என்பவரின் வீட்டுக் கூரை ஓடுகளைப் பிரித்து உள்ளே புகுந்த திருடர்கள டெக், ரேடியோ, கைக்கடிகாரம் மற்றும் ஒரு தொகைப் பணம் ஆகியவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தத் திருடர்கள் அடுத்த வீட்டுக்காரரான இராசரத்தினம் என்பவரின் வீட்டுச் சமையல் அறையில் குளிர்சாதனப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த முட்டைகளை எடுத்துக் குடித்துவிட்டு கொடுவாக் கத்தி ஒன்றையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது (க-17)

## ஆனைக் கோட்டையில் இரு கடைகளில் திருட்டு

சுதுமலை,ஜன.25

ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலயத்தின் பிற்புறமாக உள்ள இரண்டு கடைகள் உடைக்கப்பட்டு பொருள்கள், பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் திங்கள் இரவு இடம் பெற்றுள்ளது.

நல்லெண்ணெய்க்கடை மற்றும பலசரக்குக்கடை என்பனவே உடைக்கப்பட்டு சூறையாடப்பட்டுள்ளன. (க-139)

## சண்டிலிப்பாய் இந்து மெய்வல்லுநர் போட்டி

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல்1.45 மணிக்கு அதிபர் ச. சிவனேஸ்வரன தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

வலிகாமம் வலயக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க-152)

## பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரின் ஆதரவில் புண்ணிய நாச்சியம்மையார் நினைவுதினம் சார்பாக பாடசாலை மாணவர்களிடையே பண்ணிசைப் போட்டிகள் நடைபெற உள்ளன.

பண்ணிசைப் போட்டியில் கலந்து கொள்பவர்களின் பெயர் விவரங்களை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் பெப்ரவரி 11ஆம் திகதி வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறும்.

முதலாம் பரிசாக தங்கப்பதக்கமும், இரண்டாம் பரிசாக வெள்ளிப் பதக்கமும், மூன்றாம் பரிசாக வெண்கலப்பதக்கமும் வழங்கப்பட உள்ளன. (க-12)

## மானிப்பாய் இந்துவில் ஆசிரியர் கருத்தரங்கு

கடந்த 20,21ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரிய நிலையத்தில் நடைபெற இருந்த வலிகாம வலயத்தின் 8 ஆம், 11 ஆம் தரங்களுக்கான சமூகக்கல்வி புதிய பாடத்திட்ட அறிமுகக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமையும், மறுநாள் சனிக்கிழமையும் நடைபெறும் என உதவிக்கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் அறிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை 11ஆம் தர பாட ஆசிரியர்களுக்கும் சனிக்கிழமை 8 ஆம் தர பாட ஆசிரியர்களுக்கும் கருத்தரங்கு நடைபெறும்.(க-152)

# காங்கேசன் பிரதேச சபை ஊழியர் 17பேர் மின்சார சபையில் இணைவு

வலி.தெற்கு,ஜன.25

காங்கேசன்துறை பிரதேச சபை மின்சாரப் பகுதியைச் சேர்ந்த 17 மின்சார ஊழியர்கள் ஜனவரி மாதம் 15 ஆம் திகதியில் இருந்து இலங்கை மின்சார சபையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மின்சார அத்தியட்சகர், மின்கம்பி இடுபவர்கள் மற்றும் மின்சார ஊழியர்கள் தரத்தைச் சேர்ந்த இந்த ஊழியர்கள் இலங்கை மின்சார சபையுடன் இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் வெற்றிடமாகியுள்ள இடங்களுக்கு கடமை புரிய என அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வேலணை, மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களில் கடமை புரிய இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

1999 ஒக்டோபரில் நேர்முகப் பரீட்சை நடைபெற்றிருந்த போதிலும் தற்பொழுது தான் இவர்கள் இலங்கை மின்சார சபையின் ஊழியர்களாக உள்வாங்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-152)

# வீதியோரப் பற்றைகள், குப்பைகளை உடனடியாக அகற்றுவதற்கு முடிவு

## யாழ்.மாநகரசபைக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.மாநகரசபையின் சில பகுதிகளிலுள்ள வீதியோரப் பற்றைகள், கழிவுப்பொருள்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்று யாழ். மாநகரசபையின் சுகாதாரக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சுகாதாரக்குழுவின் கூட்டம் மாநகரசபை உறுப்பினர் செ.கந்தையன் தலைமையில் மாநகரசபை கட்டடத்தில் செவ்வாயன்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மானிப்பாய் வீதி, நாவலர் வீதி, முஸ்லிம் கல்லூரி வீதி, கற்குளம், கடற்கரை வீதி, ஆஸ்பத்திரி வீதி, பிரப்பங்குளம் ஒழுங்கை மற்றும் நாவாந்துறைப் பகுதிகளிலுள்ள வீதியோர குப்பைகள் மற்றும் கழி வுப்பொருள்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்றும் -

பிரப்பங்குளம் ஒழுங்கையில் (வெள்ளவாய்க்கால் ஒழுங்கை) வடிகால் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் -

தந்தை செல்வாபுரத்தில் (கொட்டடி) அமைந்துள்ள கந்தசாமி விளையாட்டு அரங்கிற்கென 5 பரப்பு சுற்றாடலைக் கொண்ட கடற்பகுதியை குப்பைகள் மற்றும் கட்டட இடிபாடுகளில் இருந்து எடுக்கப்படும் பொருள்கள், மண் போன்றவற்றைக் கொண்டு நிரப்புதல் வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (க-5)


# ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 1925



மறைவு 24 - 01 - 2000

## திருமதி வேலுப்பிள்ளை பாக்கியம்

திதி:- தைப்பிரதமை - 25.01.2001

அன்பை ஊட்டி அறிவை வளர்த்து
அவனி போற்ற எமை வாழ வைத்த
அன்பு அன்னையே!
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறாது எம் துயரம்!!

அரன் அடியில் வாழ என்றும் பிரார்த்திக்கும்.....

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
லிங்கம் கிருஷ்ணவேணி
(மகள்)
*கதிரிப்பாய்,*
*அச்சுவேலி.*

தற்காலிக முகவரி:-
*தாமரைக்குளத்தடி,*
*துன்னாலை கிழக்கு,*
*துன்னாலை.*

(C1482)



# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பிரமணியம் பாலாதேவி

நாவலடி வீதி, வட்டு.தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் பாலாதேவி நேற்று (24.01.2001) புதனன்று காலமானார்.

அன்னார் கந்தையா சுப்பிரமணியத்தின் (பிரபல புகையிலை வியாபாரி (அப்பையா) அளவெட்டி தெற்கு, தம்மழை) அன்பு மனைவியும், மதனராஜன், அமலரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மாவின் அன்பு மாமியாரும், நகுநந்தன், விதுஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (மலாயன் பென்ஷனியர்), திருமதி பாக்கியரத்தினம் ஆகியோரின் அன்பு மகளும், கார்த்திகேயன், விமலாதேவி, முருகேயன், குமரேயன், காங்கேயன், இந்திராதேவி, அகிலாண்டதேவி, சந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நேற்று (24.01.2001) புதன்கிழமை பிற்பகல் நடைபெற்று பூதவுடல் வழுக்கை ஆறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
க.சுப்பிரமணியம்
(கணவர்)

*நாவலடி வீதி,*
*வட்டு. தெற்கு,*
*வட்டுக்கோட்டை.*

(83307)

# பஸ் தரிப்பிடம் தவறான இடத்திலாம்; அதனால் அங்கு பஸ் நிற்பதில்லை

## பொது முகாமையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜன.25

உறவினர்கள் மற்றும் பெரியோர்களின் ஞாபகார்த்தமாக பஸ்தரிப்பிடங்களை நிறுவ விரும்புவோர் அது குறித்து போக்குவரத்துச் சபையுடன் தொடர்புகொண்டு இடத் தெரிவினை மேற்கொள்ள வேண்டும் என்று வட பிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் கேட்டிருக்கிறார்.

இது தொடர்பாக அவர் பத்திரிகை அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

பண்டத்தரிப்பு - சண்டிலிப்பாய் பிரதான வீதியில் ஆலோசனை பெறாமல் அமைக்கப்பட்ட பஸ்தரிப்பிடம் ஒன்றில் பஸ்கள் தரிக்காமல் செல்வது தொடர்பாக அந்த அறிக்கையில் அவர் விளக்கமளித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

2001.01.10ஆம் திகதிய தங்களது 'உதயன்' பத்திரிகையின் ஐந்தாவது பக்கத்தில் பிரசுரமாகியுள்ள 'பஸ் தரிப்பிடம் அமைப்பு' என்னும் செய்தி தொடர்பாக -

பஸ் தரிப்பிடங்கள் கட்டப்படும் போது அதனை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் எமக்கு அதுபற்றி அறிவித்து, எம்மால் வீதி ஒழுங்குகளுக்கு அமைவாக குறிப்பிடப்படும் இடத்திலேயே அதனை அமைக்க வேண்டும் என்பது எமது சபை விதிமுறையாகும். அத்தோடு வீதி அபிவிருத்தி அதிகார சபையினதும், அந்தந்த இடத்துப் பிரதேச சபையினதும் அனுமதியும் பெறப்பட்டே அமைக்கப்பட வேண்டும்.

ஆனால் மேற்படி பஸ் தரிப்பிடம்

> **உதயனில் வெளியான செய்தி**
>
> **பஸ்தரிப்பிடம் அமைப்பு**
>
> சண்டிலிப்பாய்,ஜன.10
>
> பண்டத்தரிப்பு - சண்டிலிப்பாய் பிரதான வீதியில் முல்லைப்பாடி ஞான வைரவர் ஆலயத்துக்குப் பக்கத்தில் பஸ் பிரயாணிகள் தரிப்பிடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. தனியார் ஒருவர் இப்பகுதிப் பஸ் பிரயாணிகளின் நலன் கருதி இக்கட்டடத்தை நிறுவியுள்ளார். (ஐ-135)

அமைக்கப்படும்போது எமக்கு எதுவித அறிவிப்பும் இல்லாமலும், அனுமதி பெறாமலும், வீதி ஒழுங்குக்கு முரணாகவும், வீதி விபத்து ஏற்படக்கூடிய இடத்தில் அத் தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை ஆரம்பத்திலேயே அவதானித்த எமது சபை உத்தியோகத்தர் அதை அமைப்பவரைத் தொடர்புகொண்டு, அவ்விடத்தில் தரிப்பிடம் கட்டுவது தவறு, அதனை உடனடியாக நிறுத்தி வேறு இடத்தில் கட்டுவதற்கு எம்முடன் தொடர்புகொள்ளும்படி அவருக்கு அறிவித்துள்ளார். இதற்கு மேலும் இதற்கு அருகில் வசிக்கும் எமது சாரதி ஒருவரும் இத் தவறைச் சுட்டிக்காட்டியுள்ளார். அத்தோடு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் இது பற்றி எமக்கும் அறிவித்து நானும், எனது செயலாற்று முகாமையாளரும் நேரடியாகச் சென்று பார்வையிட்டோம். இது சம்பந்தமாக நானும் தரிப்பிடம் அமைப்பவரை அழைத்து இத்தரிப்பிடம் தவறான இடத்தில் அமைக்கப்படுவது பற்றி அவருக்கு நன்கு விளங்கப்படுத்தி உள்ளோம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் தமது நெருங்கிய உறவினர்கள் ஏனையோர் ஞாபகார்த்தமாக பஸ்தரிப்பிடம் அமைப்பது ஒரு புண்ணியமான சமூக சேவையாகும். இத்தகையோர் இக்காலத்தில் இது போன்ற சேவைக்கு முன்வருவது அரிது. அப்படியிருக்க இத் தரிப்பிடம் கட்ட எண்ணியதே ஒரு பெரும் காரியமாகும். ஆனால் எமது வ.பி.போ.வ. பேருந்துகள் இந்த இடத்தில் தரித்துப் பிரயாணிகளை ஏற்றி இறக்குவது போக்குவரத்து விதிமுறைகளுக்கு முரணானதாகும் என்பது எமது விளக்கமாகும். எனவே மேலே கூறப்பட்ட காரணங்களினால் மேற்படி பஸ் தரிப்பிடத்தில் எமது சபைப் பேருந்துகள் பயணிகளை ஏற்றி இறக்குவதற்காக நிறுத்தப்பட மாட்டாது என்பதை அப்பகுதி வாழ் மக்களுக்கு மிகவும் கவலையுடன் அறியத்தருகிறேன் - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினர் கழகத்தின் ஒன்பதாவது ஆரம்ப தினத்தை ஒட்டி அண்மையில் பல நிகழ்ச்சிகளை நடத்தினர்.

அன்றைய தினம் (16.01.2001) நீளாயில் இயங்கும் கைதடி முதியோர் இல்லத்துக்கு விஜயம் செய்த கழக உறுப்பினர்கள் அங்குள்ள முதியவர்களுடன் பொழுதைக் கழித்தனர். அவர்களுக்கு மதிய உணவையும் வழங்கினர்.

அங்குள்ள முதியோருடன் றோட்டறக்ட் உறுப்பினர்கள் எடுத்துக் கொண்ட படம் இது.

றோட்டறக்ட் உறுப்பினர்கள் கடந்த 10 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்தம் வழங்கும் நிகழ்வு ஒன்றையும் நிகழ்த்தினர். (ஐ)

# மொழியியல் போக்கில் தமிழை ஆய்வு செய்த பெருமகன் சுவாமி ஞானப்பிரகாசர்

## மானிப்பாயில் உருவச் சிலை திறப்பு விழாவில் சிவலிங்கராஜா

வலி.தென்மேற்கு,ஜன.25

அகில உலக மக்களுக்காக கண்ணீர் சிந்திய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசருக்கு மானிப்பாயில் சிலை திறந்ததையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். சுவாமி ஞானப்பிரகாசர் மொழியியல் போக்கில் தமிழை ஆய்வு செய்த பெருமகன் ஆவார்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக தமிழ்துறை தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா கூறினார்.

யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளாரினால் சுவாமி ஞானப்பிரகாசரின் உருவச் சிலை திறந்து வைக்கப்பட்டு, மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரது தலைமையில் விழா நடைபெற்றது.

மானிப்பாய் - புனித அந்தோனியார் ஆலயத்தில் சுவாமி ஞானப்பிரகாசரின் சிலைக்கு முன்னால் நடைபெற்ற 125 ஆவது அகவையையும், அமரத்துவத்தின் 54 ஆவது நிறைவையும் முன்னிட்டு நடத்தப்பட்ட நிகழ்வில் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

சுவாமி ஞானப்பிரகாசர் தொட்டதெல்லாம் துலங்கும்; அவருடைய ஆற்றல், ஆளுமை, உதவும் மனப்பாங்கு எல்லாம் அவருடைய உள்ளத்தில் உதித்தவை.

இவரது வளர்ப்புத்தந்தையார் தம்பிமுத்துப்பிள்ளை வைத்திருந்த அச்சுக்கூடம்தான் இவரது தமிழ் ஆற்றலை, தமிழ் ஆர்வத்தை, தமிழ் பற்றை வளர்த்தது.

காய்த்த பழ மரத்திற்குத்தான் கல்லெறி விழும். அந்த வகையில் கல்லெறிந்தவர்களுக்கும் கனி கொடுத்த உன்னத மகான் கல்விமான் ஞானப்பிரகாசர் -

சுவாமி ஞானப்பிரகாசரின் ஒப்பியல் அகராதியை மீள் உருவாக்கம் செய்ய தென்னிந்திய திருச்சபை பேராயர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் கைகொடுத்து உதவினார்.

ஈழத்து தமிழ் அறிஞர் வரலாற்றில் சுவாமி ஞானப்பிரகாசர் அறிவுசார் நிகழ்ச்சித்திட்டங்கள் சொல்லில் அடங்காதவை.

சைவப்பெருமக்கள் - ஆறுமுக நாவலருக்கு விழா எடுப்பது போல் கிறிஸ்தவ மக்களும் சுவாமி ஞானப்பிரகாசருக்கு விழா எடுக்க வேண்டும் என நான் உங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

இன்று மொழியியலை ஆய்வு செய்தவர்கள் கிடையாது. ஆனால் அக்காலத்திலேயே மொழியியல் போக்கில் தமிழை ஆய்வு செய்தவர் சுவாமி ஞானப்பிரகாசர். அவரைப் பற்றி தமிழ்மக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தமிழியல் அன்பர்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்றர்.

யாழ்.ஆயர் அதிவண.தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் உரையாற்றுகையில் கூறியதாவது:-

மானிப்பாயில் பிறந்து யாழ்.நல்லூரில் வாழ்ந்த பெரிய மனிதர் சுவாமி ஞானப்பிரகாசருக்கு மானிப்பாயில் உரவச்சிலை திறப்பு விழா எடுத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

சைவசமயப் பரம்பரையில் உதித்த அவர் பல அறிவாற்றல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கி சமுதாய வளர்ச்சி நோக்கில் சிந்தித்தவர்.

மறைப்பணி, சமூகப்பணி, தமிழ்ப்பணி ஆகிய முப்பணிகளை தாம் வாழும் காலத்தில் மக்களுக்காகச் செய்து காட்டிய மாமனிதன்.

இவ்வாறான பெரிய மனிதரைக் காண்பது அரிது. சுவாமி ஞானப்பிரகாசருக்குக் கிடைத்த அளப்பரிய சக்திதான் தமிழை வளர்த்தது.

இதற்கு அவருடன் உதவியாக இருந்த தம்பிமுத்துப்பிள்ளையை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதனை எமது இளம் தலைமுறையினர் அறிந்து ஆராய்தல் வேண்டும் - என்றார்.

பல நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு இருந்த விழாவில் இளவாலை சென்.ஹென்றியரசர் பாடசாலை அதிபர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் வண.பிதா ஜவாபோல் (அ.ம.தி), ஆயரின் செயலாளர் வண.பிதா. பி. செல்வராஜா, வண.பிதா.ஏ.சி.கிறிஸ்தோபர் மற்றும் துறவிகள், அடிகளார்கள் கலந்து கொண்டனர். (க-185)



வலி.தெற்கு பிரதேச செயலக நடமாடும் சேவை அண்மையில் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.

முதலாவது படத்தில் இடமிருந்து வலமாக வலி.தெற்கு பிரதேச செயலர் ஆ.மகாலிங்கம், புன்னாலைக் கட்டுவன் வடக்கு கிராம அலுவலர் சு.சிவதாசன், வலி.தெற்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஜெயப்பிரகாசம் ஆகியோரைக் காணலாம்.

இரண்டாவது படத்தில் உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் மற்றும் சேவையைப் பெற்றுக்கொண்ட பொதுமக்களைக் காணலாம். (ஐ-69)

# வாசகர் திருமுகம்

## நிவாரண அரிசி மனிதருக்கு மட்டுமன்றி கால்நடைகளுக்கும் உகந்ததல்ல...!

அண்மைக்காலமாக இடம்பெயர்ந்தோருக்கான அரிசி விநியோகத்தில் உள்ள முறைகேடுகள் குறித்து பேசப்பட்டு வருகின்றது. பத்திரிகையிலும் செய்திகள் அடிக்கடி வருகின்றன.

இந்நிலையில் தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் ஒருவராகிய நான் சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத்தின் ஒரு கிளையில் கடந்த மாத இறுதியில் நிவாரணம் பெற்றேன். எனக்குரிய நிவாரணப் பெறுமதிக்கு உரிய பொருள்களாக அரிசி, சீனி, நெஸ்பிறே ஆகியன வழங்கப்பட்டன.

அப்போது எனக்குக் கிடைத்த அரிசி மனித பாவனைக்கு மட்டும் அல்ல கால்நடைகளின் பாவனைக்கே உகந்தது அல்ல.

அந்தப் பச்சைக்குத்து அரிசி அரைவாசி வெள்ளையாகவும் மிகுதி சிவப்பாகவும் கலந்து காணப்பட்டது. இதனை அரிசி ஆலையில் தீட்டினால் மட்டுமே பாவிக்கமுடியும்.

அப்படித் தீட்டியபோது வெள்ளையாக உள்ள அரிசி முழுவதும் மாவாகித் தவிட்டுடன் சேர்ந்து விட்டது. சிவப்பாக இருந்த அரிசி உடைந்து குறுணலாகிவிட்டது.

அந்த அரிசியை என்ன செய்ய முடியும்?

இது மூடையாக்கும் போது கலக்கப்படுகிறதா அல்லது இடைத்தரகர்களின் கைவரிசையா என்பது புரியாமல் உள்ளது.

அந்த அரிசியைப் பார்த்தால் ஆலையில் கூட்டி அள்ளிய கழிவு அரிசியைப் போலவே காணப்படுகிறது.

இந்நிலைக்குக் காரணமானவர்கள் யார்? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும்.

தென்மராட்சி. க.திருநாவுக்கரசு.

## ஒருவரையொருவர் குற்றம் சொல்வதால் பயனில்லை

தங்களது பத்திரிகையில் கடந்த மாதம் 15ஆம் திகதி ஆசிரிய தலையங்கத்தில் 'மக்களைக் காப்பாற்று' என்ற தலைப்பில் எழுதப்பட்ட விடயங்கள் பாவனையாளர்கள், கூட்டுறவாளர்கள், அரச அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

யாழ்.செயலக அதிகாரிகள் தாங்கள் பழைய, பழுதடைந்த அரிசியை விநியோகத்துக்கு கொடுப்பதில்லை என்கிறார்கள். அதேசமயம், கூட்டுறவுச் சங்கத்தினர் மோசமான அரிசியே தமக்குக் கிடைக்கின்றது என்கிறார்கள். ஆனால் இடம்பெயர்ந்த மக்களே கழிவு அரிசியை பெற்று அவலப்படுகிறார்கள்.

உணவுத் தரங்களைப் பரிசோதிக்க, யாழ்.சுகாதாரத் திணைக்களத்தில் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தும் பயன் இல்லை.

மக்கள் நலன் கருதி ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டாது தகுதி வாய்ந்த அதிகாரி மூலம் பரிசோதனை செய்த பின் விநியோகத்தை செய்வதே சிறப்பாகும்.

லவ்லேன்,
உடுவில். ம.மகேந்திரன்

## தாதியின் பொறுப்பற்ற தன்மையால் ஆபத்தை எதிர்நோக்கும் நோயாளி

தொழில்களிலேயே சிறந்த தொழிலாக எம்மவர் கருதும் தாதித் தொழில் எம்மவருக்கே இன்று ஒரு பாரதூரமான தலையிடியை ஏற்படுத்தி வருகின்றது. காரணம் வைத்தியசாலைகளிலே மருத்துவப் பரிசோதனையின் பின் மருத்துவர் மருந்து வகைகளை நோயாளிகளுக்கு எழுதிக் கொடுப்பதுடன் ஊசி மூலமும் ஏற்றப் பணிக்கிறார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் தாதியர் சிலர் தமது தொழிலை சரியான முறையில் செயற்படுத்தத் தவறிவிடுகின்றனர். ஒரு நோயாளிக்கு ஏற்றிய ஊசியை உயர் வெப்பநிலையில் அவித்து தொற்று நீக்குதல் வேண்டும் அல்லது ஊசியை மாற்றுதல் வேண்டும். ஆனால் இன்று சில மருத்துவமனைகளில் இதனை மறந்து செயல்படுகின்றனர் தாதியர்கள்.

இதற்கு என்ன காரணம்?

சொந்தப் பிரச்சினைகள் காரணமாக இவர்கள் விரக்தி மனப்பான்மையிலே ஏதோ வேலை செய்தால் சரி என நினைத்து இவ்வாறாக பொறுப்பின்றிச் செயற்படுகிறார்கள்.

கூடிய வேலைப்பழு காரணமாக ஒருவேளை இவர்கள் இதனைச் செய்யத் தவறிவிடலாம். ஆனால் இதனால் ஏற்படும் விபரீதங்களுக்கு யார் பொறுப்பு?

எது எவ்வாறு இருப்பினும் தமது கடமையைச் சரிவரச் செய்ய முடியாத, செய்யத் தவறுகின்ற எந்த ஓர் ஊழியரும் மக்களை நோயாளியாக்கும் தொழிலில் ஈடுபடுவது விரும்பத்தக்கதல்ல.

இன்று எயிட்ஸ், மலேரியா போன்ற பல கொடிய நோய்கள் இதன் மூலம் பரவும் பேரபாயம் உள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் சிலர் பொறுப்பின்றி நடப்பது மனித இனத்திற்குச் செய்யும் துரோகமாகும்.

இராஜவீதி, கோப்பாய் தெற்கு. அ.மாலினி

## காஷ்மீரில் ஒருதலைப்பட்சமான

# தாக்குதல் நிறுத்தத்தை இந்தியா மேலும் ஒரு மாதகாலம் நீடித்தது!

புதுடில்லி, ஜன. 25

காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் நிறுத்த அறிவிப்பை இந்திய அரசு மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடித்துள்ளது.

நேற்று முன்தினம் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் உள்துறை அமைச்சர் அத்வானி, பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெனார்ண்டஸ், வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் ஆகியோர் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது,

கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங் பேசுகையில்.

காஷ்மீரில் பொதுமக்களுக்கு எதிரான கொடூரமான தீவிரவாதம் தொடர்ந்த போதிலும் வன்முறை முடிவுக்கு வந்து அமைதி திரும்பும் என்ற நம்பிக் கையோடு தாக்குதல் நிறுத்தத்தை அரசு நீடித்துள்ளதாகக் கூறினார்.

காலத்தின் தேவை அமைதி என்பதை அங்கீகரித்து. லஸ்கர்-இ-தொய்பா, ஜெய்-ஷி-மொகமட் போன்ற பாகிஸ்தானிய ஆதரவுத் தீவிரவாத அமைப்புகளை பாகிஸ்தான் கட்டுப்படுத்த வேண்டும் என்றும்—

காஷ்மீரில் நீடிக்கப்பட்டுள்ள தாக்குதல் நிறுத்தத்தை நிலையான அமைதி காணப் பயன்படுத்த வேண்டும் என்றும்—

பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

இதேசமயம், காஷ்மீரில் வன்முறையில் ஈடுபடுபவர்கள் மீதான தாக்குதல் நடவடிக்கைகளை இந்த அறிவிப்புத் தடை செய்யாது என்றும் அவர் கூறியுள்ளார்.

ரமழான் பண்டிகையை யொட்டி கடந்த ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி முதல் இந்திய அரசு ஒரு தலைப் பட்சமாகத் தாக்குதல் நிறுத்தத்தை அறிவித்திருந்தது.

பின்னர் தாக்குதல் நிறுத்தத்தை குடியரசு தினமான ஜனவரி 26 வரை நீடித்த இந்திய அரசு இப்போது மேலும் ஒரு மாதகாலத்துக்கு தாக்குதல் நிறுத்தத்தை நீடித்துள்ளது. (ஒ-7)

### ஈராக் குறித்த பேச்சுவார்த்தை

நியூயோர்க், ஜன. 25

ஈராக் மீதான ஐ நாவின் தடைகளை விலக்கிக் கொள்வது தொடர்பான பேச்சு வார்த்தை அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற உள்ளது,

இந்தப் பேச்சு வார்த்தையில் ஐ. நா, செயலாளர் நாயகம் கொபி அனான் ஈராக்கியப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

### கொலம்பியாவில் மேயர் சுட்டுக்கொலை

பொகோடா, ஜன. 25

கொலம்பியாவில் இடது சாரித் தீவிரவாதிகள் மேயர் ஒருவரைச் சுட்டுக் கொன்றனர்.

உலக அரங்கில்

வடமேற்கு நகரான ஜாராடோ நகர மேயரான ஹென்றி பெரியா டோரஸ் என்பவரே கொல்லப்பட்டவராவார்.

40 ஆண்டு கால உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவர இடது சாரித் தீவிரவாதிகள் அரசுடன் பேச்சுக்களையும் நடத்தி வருகின்றனர். (ஒ)

## அத்வானியை கொல்ல டில்லிக்குள் தற்கொலைப் படை ஊடுருவல்!

புதுடில்லி, ஜன. 25

இந்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானியைக் கொலை செய்யும் நோக்கத்துடன் தற்கொலைப் படையொன்று இந்தியாவுக்குள் ஊடுருவியுள்ளது.

உள்துறை அமைச்சகச் செயலாளர் கமல் பாண்டே செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.



பாகிஸ்தான் ஆதரவிலான தீவிரவாத இயக்கங்களைச் சேர்ந்த இந்தத் தற்கொலைப் படையினருக்கு அத்வானியைக் குறி வைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளதாகவும்.

இது தொடர்பாக புலனாய்வு நிறுவனங்கள் தெரிவித்த தகவல்கள் பரிசீலிக்கப்பட்டு முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் கமல் பாண்டே மேலும் கூறினார்.

காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா மீதாத கொலை முயற்சி, செங்கோட்டை மற்றும் ஸ்ரீநகர் விமான நிலையம் ஆகியவற்றுக்குள் ஊடுருவித் தாக்கியது போன்ற சம்பவங்கள் குறித்து விசாரணைகள் நடத்தியபோதே அத்வானியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பது தெரியவந்ததாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-7)

## அமெரிக்கத் தூதர் பயணம் செய்த

# யேமன் நாட்டு விமானத்தை கடத்த முயன்றவர் கைதானார்

ஏடன், ஜன, 25

அமெரிக்கத் தூதர் உட்படப் பயணிகளுடன் விமானத்தைக் கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டது. விமானத்தைக் கடத்தியவரும் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

யேமன் விமான சேவை நிறுவனத்துக்குச் சொந்தமான விமானத்தைக் கடத்த எடுக்கப்பட்ட இந்த முயற்சி முறியடிக்கப்பட்டுப் பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக விடுவிக்கப்பட்டதாக விமான நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யேமன் நாட்டுக்கான அமெரிக்கத் தூதர் உட்பட 91 பயணிகள் மற்றும் விமானப் பணியாளர்கள் ஆகியோர் சென்ற விமானத்தை ஒருவர் கடத்த முயற்சித்தார்.

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் ஆதரவாளர் என்று தன்னைக் கூறிக்கொண்ட கடத்தல்காரர் விமானத்தை வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப் போவதாக மிரட்டினார்.

அமெரிக்கத் தூதருடன் உடன் வந்திருந்த அவரது பாதுகாப்பு அதிகாரிகள் கடத்தல்காரரை மடக்கிப் பிடித்துக் கடத்தல் முயற்சியை முறியடித்ததாகக் கூறப்படுகிறது. (ஒ-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்


எமது வித்தியாலய வளர்ச்சிக்கு
மனமுவந்து உதவிக் கரம் நீட்டிய
கௌரவ அமைச்சர்
**உயர்திரு. டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்
யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்
**உயர்திரு. க. வே. குகேந்திரன்**
அவர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்தும்
இவ்வேளையில்,

- ★ வித்தியாலயத்திற்கு இரண்டு மாடிக் கட்டட மேற் பகுதியை அமைத்துத் தந்தமை,
- ★ கணனி வசதியினை ஏற்படுத்தித் தந்தமை,
- ★ ஆரம்பப் பிரிவு—தற்காலிகக் கொட்டகை அமைத்துத் தந்தமை,

ஆகிய செயற்பாடுகளை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/நாவாந்துறை றோ. க. வித்தியாலயம்.
(8335 )

## முதலாம் ஆண்டு நினைவலை..



பிறப்பு: 01 — 09 — 1947

இறப்பு: 25 — 0 — 2000

### றோசலின் வின்சஸ்லொஸ்

அன்னை உன்னை இழந்து
ஆறாத் துயரில் தவிக்கின்றோம்.
அகால ஒளிவிளக்காய் — பாரில்
அணைந்துவிட்ட தேனம்மா?
என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், சகோதரர்கள்.

இல. 10, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(83331)

## ஊழல் விசாரணை முடியும்வரை

# பிலிப்பைன்ஸிலிருந்து வெளியேற எஸ்ரடாவுக்கு புதிய அரசு தடை

மணிலா. ஜன 25

பிலிப்பைன்ஸின் அதிபர் பதவியிலிருந்து விலகிய ஜோசப் எஸ்ரடா மீதான ஊழல் குற்றச் சாட்டுக்கள் குறித்த விசாரணை முடியும் வரை நாட்டை விட்டுவெளியேற புதிய அரசு தடை விதித்துள்ளது

அத்துடன் எஸ்ரடாவும், அவரது மனைவியும், அவர்களது வங்கிக் கணக்குகளில் இருந்து பெரும் தொகைப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டதை அடுத்து பதவி விலகியுள்ள அதிபர் எஸ்ரடா விசாரணைகளில் இருந்து தப்பித்துக் கொள்வதைத் தடுப்பதற்காகவே இத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளதாக புதிய அதிபர் திருமதி அரோயா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில்,

திருமதி அரோயாவிடம் நிரந்தரமாக ஆட்சியை ஒப்படைக்கவில்லை என்றும் தான் தற்காலிகமாகவே அதிபர் பதவியிலிருந்து விலகியுள்ளதாகவும் எஸ்ரடா கூறியுள்ளார்.

செனட் சபைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எஸ்ரடாவின் இந்தக் கருத்துக் குறித்து அரசமைப்புச் சட்ட வல்லுநர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுவதாகவும்—

எஸ்ரடா பதவி விலகியது மற்றும் புதிய அதிபர் பதவி ஏற்றது ஆகியவை தொடர்பாக தீவிர சட்ட மோதல்கள் பிலிப்பைன்ஸில் எழக்கூடும் என்றும் கூறப்படுகிறது (ஒ — 7)

### ஐ. நா. தடைகளை செயற்படுத்தத் தீர்மானம்

லண்டன். ஜன. 25

தலிபானின் கட்டுப்பாட்டில் உள்ள ஆப்கானிஸ்தானுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்கும் ஐ. நா. வின் தீர்மானத்தை செயற்படுத்தப் போவதாக பிரிட்டனும், இந்தியாவும் அறிவித்துள்ளன.

இருநாடுகளும் தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து ஏற்படுத்திய உடன்பாட்டின் அடிப்படையில் இந்த முடிவை கூட்டாகத் தெரிவித்துள்ளன.

## நம்பிக்கையை ஏற்படுத்தும் மேற்காசிய அமைதிப் பேச்சு

கெய்ரோ, ஜன. 25

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனப் பிரதிநிதிகள் இடையே நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இருதரப்பினரும் தெரிவித்துள்ளனர்.

எகிப்தில் பலஸ்தீனர்களின் பரிந்துரையின் பேரில் இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெறுகிறது.

குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் குறைந்த பட்சம் உத்தேச சமாதான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியையாவது உருவாக்கும் நோக்கிலே பச்சுவார்த்தை தொடர்ந்து நடத்தப்படுவதாக எகிப்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பேச்சில் கலந்து கொண்டுள்ள பலஸ்தீனப் பிரதிநிதி அகமட் கூரி, மேற்காசியப் பிரச்சினையில் அமைதி ஏற்படும் நம்பிக்கை தோன்றியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

சிக்கலுக்குரிய அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் பேசக்கூடிய அதிகாரம் கொண்ட பிரதிநிதிகளை பலஸ்தீனத் தரப்பு பேச்சுவார்த்தைக்கு அனுப்பியுள்ளதால் உடன்படிக்கையை ஏற்படுத்த முடியும் என்று இஸ்ரேலிய அமைச்சரும், பிரதிநிதியுமான அமான் சொகன் கூறியுள்ளார். (ஒ-10)

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூ. சங்கங்களில்

# தகைமையின்றி ஐந்து வருடங்கள் பணிபுரிந்தோருக்கும் நிரந்தர நியமனம்

அரியாலை, ஜன. 25

பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் கல்வித் தகைமை இன்றிப் பணியாற்றும் பணியாளர்கள் தொடர்ந்து ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்திருந்தால் அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டுறவுச் சங்கங்களில் நீண்டகாலமாகப் பணியாற்றும் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டது.

அந்தச் சுற்றறிக்கையில் கல்வித் தகைமையின்றித் தற்காலிகமாகக் கடமையாற்றும் பணியாளர் தொடர்ந்து ஐந்து வருடங்கள் சேவையாற்றி இருப்பின் அவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-17)

# இலங்கைத்தமிழருக்கு உதவுமாறு இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை

## சுவாமி சித்ருபானந்தா கடிதம்

பருத்தித்துறை, ஜன. 25

இக்கட்டான நிலையில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு உதவும் படி இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு பருத்தித்துறை ஸ்ரீசாரதாசேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ருபானந்தா கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இலங்கையில் உள்ள இந்தியத் தூதர் கோபாலகிருஷ்ண காந்தி ஊடாக அனுப்பப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில் 1983 ஆம் ஆண்டு முதல் சொல்ல முடியாத அளவுக்கு துன்ப, துயங்களையும், உயிரிழப்புகளையும், உடைமைச் சேதங்களையும் இலங்கைத் தமிழர்கள் அனுபவித்து வருகிறார்கள்.

எமது வழிகாட்டும் ஒளியாக உள்ள சுவாமி விவேகானந்தர் பிறந்த இந்தியா மீது நாம் நம்பிக்கை வைத்துள்ளோம்.

இலங்கைத் தமிழர்கள் இனிவரும் காலத்தில் மரியாதைக்குரிய, நிம்மதியான வாழ்க்கையை வாழ்வதற்கு இந்தியா தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சுவாமி சித்ருபானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(க-ஒ)

# யாழ். கூ. சங்கக் கிளைகள் இன்று மூடப்படும்

அரியாலை, ஜன. 25

யாழ். பல நோக்குக கூட்டுறவுச் சங்கத்தின் சகல பணியாளர்களுக்கும் இன்று வியாழக்கிழமை விடுமுறை வழங்கப்பட்டிருக்கிறது. இதனால் சங்கத்தின் கிளைகள் மற்றும் சங்க நிர்வாகம் என்பன இன்று செயற்படமாட்டாது என்று சங்கத் தலைவர் சி. வி. கே. சிவஞானம் அறிவித்துள்ளார்.

இம்முறை தைப்பொங்கல் தினம் விடுமுறை நாளான ஞாயிறன்று வந்ததால் அதற்குப் பதிலாகவே சங்கப் பணியாளர்களுக்கு இன்று விடுமுறை வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-17)

# தென்மராட்சிக் கல்வி வலயத்துக்கு நியமனம் பெற்ற பட்டதாரிகள்

## கடிதங்களைப் பெறுமாறு கோரிக்கை

தென்மராட்சி, ஜன. 25

வடக்கு— கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் பட்டதாரிப் பயிலுநர்களாக நியமனம் பெற்ற 21 ஆசிரியர்களுக்கான ஆசிரியர் சேவை 3: 1 இல் உள்ளீர்ப்பு செய்யப்பட்ட நியமனக் கடிதங்கள் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நியமனக் கடிதங்களை வலய கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

நியமனம் பெற்ற ஆசிரியர்களின் பெயர்களும் நியமனம் வழங்கப்பட்ட பாடசாலைகளின் விவரங்களும் வருமாறு:-

★ செல்வி தயாமதி மார்க்கண்டு — சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை.

★ செ. பாஸ்கரன் — கைதடி முத்துக்குமாரசாமி ம. வி.

★ க. ஈஸ்வரன் — மீசாலை வீரசிங்கம் ம. வி.

★ மு. பிரகலாதனன் — வரணி ம. வி.

★ செல்வி ஸ்ரீலதா சின்னத்தம்பி — எழுதுமட்டுவாழ் அ. த. க. பாடசாலை.

★ மு. ஆனந்தராசா — இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.

★ திருமதி சௌரி முரளி — நுணாவில் அமிர்தாம்பிகை வித்தி.

★ திருமதி நிர்மலா முருகதாஸன் — மீசாலை விக்னேஸ்வரா வித்தி.

★ செல்வி அன்பரசி இரத்தினம் — மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.

★ செல்வி விஜயலட்சுமி தங்கவடிவேல் மட்டுவில் கமலாசனி வித்தி.

★ செல்வி வசந்தகுமாரி சுப்பிரமணியம் — இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தி.

★ செல்வி மதனா சின்னத்தம்பி— வரணி ம. வி.

★ செல்வி சுதர்சன் சிவசக்தி— நாவற்குழி ம. வி.

★ தி. கிரிதரன்— உசன் இராமநாதன் ம. வி.

★ பொ. சந்திரகுலசிங்கம்— வரணி ம. வி.

★ ஐ. தேவஈஸ்வரன் — விடத்தற்பளை கமலாசனி வித்தி.

★ செல்வி ஜெயரஞ்சினி வேலாயுதபிள்ளை — எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தி.

★ திருமதி சித்திரலேகா திருக்குமரன் — குடமியன் அ. த. க. பாட.

★ திருமதி விஜயலக்சுமி நந்தகுமார் — நாவற்குழி ம. வி.

★ செல்வி மதிலோஜினி வல்லிபுரம் — பளை மத்திய கல்லூரி.

★ செல்வி கிருபாம்பாள்— பத்மநாதன் — பளை மத்திய கல்லூரி.

(ஐ-117)



## சாயி சிந்தனை

கடவுள் பல உருவங்களில் வருகின்றார். அம்மா, அப்பா, நண்பர், விருந்தினர் நோயாளி, ஏழை இப்படி எல்லா உருவங்களிலும் வருபவர் அவரே.

அவரை நாம் அடையாளங்கண்டு கொள்ள முடியாது. ஆனால் உணர்ந்து கொள்ளமுடியும். அம்மாவையும் அப்பாவையும் கடவுளைப் போல் மதித்து அன்பு செலுத்து! ஏனெனில் உன்னைப் பெற்று வளர்த்து, பேணிக் காத்து அறிவூட்டி வைத்தவர்கள் நமது தாய் தந்தையர்கள் அல்லவா!

எனவே தினமும் பெற்றோரின் பாதங்களைத் தொட்டு வணங்கு; நீ எதிலும் வெற்றியைக் காண்பாய். எளியவர்களிடம் அன்பு செலுத்து. நீ பிறரிடம் அன்பாக நடந்து கொண்டால் கடவுள் உன்னிடம் அன்பாக இருப்பார். இதைவிடப் பெரும்பேறு வேறு உண்டா?

ஆதாரம்
சனாதன தர்மம்

# தையல் டிப்ளோமா பயிற்சி நெறி

நவாலி, ஜன. 25

வடக்கு—கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டு வரும் 2001 ஆம் ஆண்டுக்கான தையல் டிப்ளோமா பயிற்சி நெறி சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்வளவுப் பிள்ளையார் கோயிலடிக்கு அருகில் உள்ள கட்டடத்தில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் நா. வேதநாயகன் இந்தப் பயிற்சி நெறியை ஆரம்பித்தார்.

(க-100)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 25

இம் மாதம் 23 ஆம் திகதி வரையும் வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### சங்கானை

[150773ஏ], [176936ஏ],
]178640ஏ], [178664ஏ],
[178679ஏ], [178826ஏ],
[178826பி].

### நெடுந்தீவு

[13939ஏ], [13939பி],
[14313ஏ], [14313பி],
[14313சி], [14313டி[,
[14313ஈ], [14313எவ்],
[14331ஜி], [14454பி],
[14455ஏ], [14455பி],
[14455சி], [14496ஏ],
[14496பி[, [14504ஏ],
[14504பி], [14512ஏ],
[14512பி], [14512சி[,
[14512டி], [14512ஈ],

### யாழ்ப்பாணம்

(78070ஏ), (78070பி),
(78070சி), (178289ஏ),
(178353ஏ), (178359ஏ),
(178359பி), (178361ஏ),
(178386ஏ), (178386பி),
(178386சி), (178391ஏ),
(178391பி), (1783[illegible]சி),
(178400ஏ), (1784[illegible]ஏ),
(178426பி), (178442ஏ),
[178443ஏ], [178443பி],
[178443சி], [178465ஏ],
[178465பி], [178495ஏ],
[178495பி], [178496ஏ],
[178496பி], [178496சி],
[178496டி], [178497ஏ],
[178500ஏ], [178500பி],
[179818ஏ]
[179828ஏ], [179828பி],
[179828சி], [179828டி],
[179830ஏ], [179830பி],
[179833ஏ], [179833பி],
[179843ஏ], [179846ஏ],
[179850ஏ], [179863ஏ],
[179892ஏ], [179905ஏ],
[179905பி], [179975ஏ],
[179976ஏ], [179976பி],
[179986சி], [179986ஏ],
[179986பி], [187440ஏ],

### ஊர்காவற்றுறை

(13260ஏ), (13944ஏ),
(13944பி), (13944சி),
(14146ஏ), (14338ஏ),
(14373ஏ), (14373பி),
(14383ஏ), (14383பி),
(14383சி), (14383டி),
(14412ஏ), (14413ஏ),
(14426ஏ), (14426பி),
(14426சி), (14426டி),
(14428ஏ), (14428பி),
(14428சி), (14429ஏ),
(14433ஏ), (14433பி),
(14434ஏ), (14434பி),
(14238ஏ), (14438பி),
(14447ஏ), (14447பி),
(14447சி), (14447டி),
(14452ஏ), (14452பி),
(14452சி), (14462ஏ),
(14464ஏ), (14465ஏ),
(14467ஏ), (14468ஏ),
(14468பி), (14470ஏ),
(14470பி), (14473ஏ,
(14483ஏ), (14483பி),
(14485ஏ), (14485பி),
(14485சி), (14485டி),
(14486ஏ), (14486பி),
(14486சி), (14486டி),
(14489ஏ), (14497ஏ),
(14497பி), (14510சி),
(14510டி), (14510ஈ),
(14514ஏ), (14514பி),
(14517ஏ), (14518ஏ),
(14518பி), (14519ஏ),
(14519பி), (14520ஏ),
(14525ஏ), (14533ஏ),
(14533பி), (14533சி),

### கோப்பாய்

(178335ஏ), (178335பி),
(179915ஏ), (179915பி),
(179915சி), (179915டி),
(179915ஈ),

### நல்லூர்

(172105ஏ), (173115ஏ),
(173115பி), (178163ஏ),
(178259ஏ), (178412ஏ),
(178412பி), (178474ஏ),
(179917ஏ), (179917பி),
(180082ஏ), (169193ஏ),
(169193பி), (169193சி),
(178690ஏ), (178735ஏ),
(179029ஏ), (179044ஏ),
(179106ஏ),

### சண்டிலிப்பாய்

[176683ஏ], [176683பி],
[177012ஏ], [177012பி],
[177012சி], [178678ஏ],
[178722ஏ], [178820ஏ],
[178923ஏ], [179114ஏ],
[179114பி], [179115ஏ],
[179115பி], [179115சி],
[179115டி], [179115ஈ],

### தெல்லிப்பழை

[160474ஏ], [160474பி],

### உடுவில்

[178666ஏ], [178666பி),
[178808ஏ], [178808பி],
[178808சி], [178808டி],
[178809ஏ], [178809பி],
[178809சி], [178810ஏ],
]178810பி], [178810சி],
[178810டி], [178814ஏ],
[178814பி], [178817ஏ],
[1788885ஏ];

### வேலணை

(14245ஏ), (14363ஏ),
(14370ஏ), (14370பி),
(14370சி), (14370டி),
(14370ஈ), (14410ஏ),
(14410பி), (14410சி),
(14410டி), (14410ஈ),
(14410எப்), (14442ஏ),
(14442பி), (14442சி),
(14442டி), (14448ஏ),
(14448பி), (14453ஏ),
(14453பி), (14453சி),
14453டி), (14453ஈ),
(14453எப்), (14453ஜி),
(14454ஏ), (14457ஏ),
(14460ஏ), (14460பி),
(14469ஏ), (14473பி),
(14475ஏ), (14475பி),
(14477ஏ), (14477பி),
(14478ஏ), (14488ஏ),
(14488பி), (14488சி),
(14490ஏ), (14490பி),
(14494ஏ), (14494பி),
14498ஏ), (14498பி),
(14498சி), (14499ஏ),
(14505ஏ), (14510ஏ),
(14510பி), (14511ஏ),
(14515ஏ), (14516ஏ),

[ஐ-10]


## நன்றியுடன் பாராட்டு

தொலைந்துபோன எனது $1\frac{1}{2}$ பவுண் மோதிரத்தை நான் மீண்டும் பெற்றுக் கொள்ள, 'உதயன்' பத்திரிகை மூலம் விளம்பரம் செய்து, அதனைத் தந்துதவிய வல்லை வீதி, சங்கானையைச் சேர்ந்த

மூத்ததம்பி உதயச்சந்திரன்
[உரிமையாளர் உதயா பேக்கரி]

அவர்களுக்கு எனது நன்றியுடன் மனப்பூர்வமான பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி. சிவராசலிங்கம்,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

[சி/14968]

# ஈராண்டு நினைவலைகள்



பூவாக 07 — 05 — 1926

புனிதையாக 25 — 01 — 1999

திருமதி

## மனுவல் செல்லம்மா

(காங்கேசன்துறை)

இருவிழி சிந்திய நீர்த்துளி இன்னும் காயவில்லை
அதற்குள்ளா! - ஈராண்டு ஆன தம்மா?
தேடுகின்றோம் நாங்கள் தேடலின் முடிவுகள்
கிடைக்கவில்லை.

குழந்தையானது எம் இதயம்
விம்மலை இன்னும் அடக்க முடியவில்லை
மனங்களில் மலர்ந்த மலர்களால் அர்ச்சிக்கின்றோம்
நாங்கள்

உன் மனம் சாந்தி கொள்ளும்.

பிரிவால் துயருறும்:
கரோலிஸ் மனுவல்
குடும்பத்தினர்.

அழகு நிலா',
கல்லூரி வீதி,
இளவாலை.
T. P. No 070 - 212532

(சி/14957)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் சின்னத்துரை ஸ்ரீ முருகதாஸ்

(நூலக உதவியாளர், பிரதேச சபை, சாவகச்சேரி)

தோற்றம் 1953 - 01 - 25

மறைவு 2000 - 12 - 27

பாசத்தின் சுமையோடு பறந்து சென்ற அப்பாவே!
உங்கள் முகத்து ஒளியினிலே
நாங்கள் முகம் மலர்ந்து வீற்றிருந்தோம்.
கலகலப்பு வாழ்க்கை எல்லாம்
கனவாய் மறைந்ததே அப்பா!
துன்ப சோகத்தில் முகம் வாடி
விழி எல்லாம் நீர் தேங்கி
விம்மலும் விக்கலும் விடையாகி விட்டதே அப்பா!

27 - 12 - 2000 ஆம் திகதி அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்தி கேட்டு பல இடங்களில் இருந்து வந்து இறுதி அஞ்சலி செலுத்தியோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், பத்திரிகைகளில் கண்ணீரஞ்சலிகள் பிரசுரம் செய்தோர் மற்றும் இறுதிக் கிரியைகள், ஊர்வலம், தகனம் வரை உதவி புரிந்த அனைவருக்கும் எமது உளங் கனிந்த நன்றிகள்.

நாளை (26 - 01 - 2001) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

தற்காலிக முகவரி:
''கற்பகம்'',
மணல் வீதி,
தம்பசிட்டி,
பருத்தித்துறை.

நிரந்தர முகவரி;
ஆசிரியர் வீதி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

(83178)

## கனடா வாசி வழங்கிய பாடசாலைச் சீருடைகள்

நவாலி, ஜன. 25

நவாலி முருகானந்தா பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் 33 பிள்ளைகளுக்கு கனடாவில் பணிபுரியும் சிவ சோதிரத்தினம் என்பவரால் சீருடைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சீருடைகளை பாலர் பாடசாலை மண்டபத்தில் வைத்து அவரது தாயார் அருள்மலர் கனகரத்தினம் விநியோகித்தார்.

(க-100)

## போதைவஸ்து விழிப்புணர்வுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன. 25

மனித முன்னேற்ற நடு நிலையத்தினால் போதைவஸ்து விழிப்புணர்வுதொடர்பாக கட்டுரை மற்றும் சுவரொட்டிப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மாணவர்கள் மற்றும் வெளியார்கள் என இரு பிரிவாக நடத்தப்படும் இந்தப்போட்டிகளில் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். (க-5)

## பொருள்காட்சி

காரைநகர், ஜன. 24

வடக்கு—கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தையல், மனையியல் பொருள் காட்சி நாளை வெள்ளி, சனி இரு தினங்களும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற உள்ளது.

இந்தப் பொருள்காட்சியின் ஆரம்ப வைபவம்நாளைவெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் இடம்பெறும்.

வலி.வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், கிராம அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் (திருகோணமலை) இ. இரவீந்திரன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ஐ-73)

## 220 பேருக்கு மருத்துவப் பரிசோதனை

மானிப்பாய், ஜன. 25

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்துடன் மானிப்பாய் கோவில்பற்று சாவகச்சேரி லயன்ஸ்கழகங்கள் இணைந்து அராலி சரஸ்வதி வித்தியாலயத்தில் நடத்திய வைத்திய கண் பரிசோதனையின்போது 220 நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டனர்.

இவர்களில் கண்பரிசோதனைக் குட்படுத்தப்பட்ட 117 பேரில் 60 பேருக்கு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினால் இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. 62 பேருக்கு இரத்த அழுத்த பரிசோதனை மேற்கொண்டபோது 11 பேருக்கு இரத்த அழுத்த நோய் இருக்கக் காணப்பட்டது. 41 பேர் நீரிழிவு பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது 5 பேருக்கு நீரிழிவு நோய் இருக்கக் காணப்பட்டது.

இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்ட நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்கு சிபார்சு செய்யப்பட்டனர்.

வைத்தியபரிசோதனையை லயன் டாக்டர் எஸ். சதாசிவமும், கண் பரிசோதனையை லயன் ஜே. எஸ். பெர்னாண்டோ சகோதரர்களும் நடத்தினார்கள்.

(ஐ-90)

# நாடகப் பயிலகம் - 2001
# SCHOOL OF DRAMA

யாழ். திருமறைக் கலாமன்றத்தினால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற மேற்படி பயிலகத்தின் நாடக அரங்கு சார்ந்த பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவிருப்பதால் பயிலவிரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- நாடக அரங்கு தொடர்பான பயிற்சி பெற விரும்புபவர்களுக்கும்,
- நாடகமும் அரங்கியலையும் கற்கை நெறியாகக் கொண்டவர்களுக்கும் மிகப் பயனுள்ள பயிற்சி நெறி.

விண்ணப்ப முடிவு திகதி: 15 — 02 — 2001

நாடகப்பயிலகம்,
திருமறைக் கலாமன்றம்,
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ. இல: 2393

(சி/14965)

# பிறந்தநாள் நினைவும் 3 ஆம் வருட நினைவஞ்சலியும்



மலர்வு 25 — 01 — 1941

உதிர்வு 29 — 01 — 1998

## அமரர் காசிப்பிள்ளை யோகரத்தினம்

[JAPAN]

திதி: 25- 01- 2001

ஆண்டு மூன்று சென்றாலும் எம் துயரம் நீங்காது
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

750, பலாலி வீதி,
திருநெல்வேலி.

[83232]

# 4 ஆம் ஆண்டு நீங்காத நினைவாக



மண்ணக வாழ்வில் 1923 — 01 — 24

விண்ணக வாழ்வில் 1997 — 01 — 25

மதுரகான நாதசுரமணி கானக்குயில்

## அமரர் கார்த்திகேசு சின்னத்துரை

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எங்கள் வாழ்வியலின் பகலவனே!
எங்கள் உறவின் உறு துணையே
எமை வாழ்வித்த காலங்கள் பலப்பல
ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எக்காலும்
எம் நெஞ்சில் என்றும் நீங்காது.

மனைவி, பெறாமகன்,
ரவீச்சந்திரன் - குடும்பத்தினர்.
(ஜேர்மனி)

பிருந்தாவனம்,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(சி-14926)

# புலிகளின் யுத்தநிறுத்தத்தைப் பயன்படுத்தி அரசு பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்

## யாழ்.மாநகரசபைக் கூட்டத்தில் மேயர் ரவிராஜ் உரை

யாழ்ப்பாணம்,ஜன.25

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தினை மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்து தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி உள்ளவேளையில் அரசாங்கம் இதனைப் பயன்படுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

- இவ்வாறு யாழ்.மாநகரசபை மேயர் சட்டத்தரணி என்ரவிராஜ் யாழ். மாநகரசபையில் மாதாந்தக் கூட்டத்துக்கு தலைமைவகித்து உரையாற்றும் போது கூறினார்.

யாழ்.மாநகரசபைக் கட்டடத்தில் நேற்று இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

இன்று மக்களுக்கு தேவையானது உடனடி யுத்தநிறுத்தம். யுத்தத்தைநிறுத்தச செய்வதற்கு ஜனநாயக வழிகளில் நாம் முயற்சி செய்ய வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் அண்மையில் சுயநிர்ணய உரிமை தொடர்பாக தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தி உள்ளனர்.

இதுபோன்று எமது உணர்வுகளை நாமும் வெளிப்படுத்த வேண்டும்.

கொழும்பில் வசிக்கின்ற எமது மக்களுக்கு யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது என்றே தெரியாது.

இங்கு மக்கள் படும் கஷ்டங்கள், பல்குழல் பீரங்கிகளின் தாக்கம், இடமபெயர்வு போன்ற எமது மக்கள் படும் அவலங்கள் பற்றி எதுவுமே தெரியாது அவர்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இங்கு சிவில் நிர்வாகம் முழுமையாக நடைபெறவில்லை. மாநகர சபையின் எல்லைக்குள் மூன்றில் ஒரு பகுதி இராணுவ முகாம்களாகவோ, பொலீஸ் நிலையமாகவோ, பாதுகாப்பு அரண் உள்ள பகுதிகளாகவோ காணப்படுகின்றன.

நகரில் பிரதான சாலைகள் மூடபட்டுள்ளன. இதனால் சபையின் வருமானம் கணிசமான அளவு குறைந்துள்ளது.

முற்றாகவோ, பகுதியாகவோ நகரில் உள்ள பல கட்டடங்கள் சேதமடைந்த நிலையில் இருக்கின்றன.

மாநகரசபைக் கூட்டத்தை கூட்டுவதற்கு கூட ஒழுங்கான ஒரு கட்டடம் இல்லை; சபை முதல்வருக்கு அலுவலகம் இல்லை; உறுப்பினர்கள் சபையில் வந்து உரையாடிச் செல்வதற்கு கட்டடவசதி இல்லை.

இந்த நிலையில் அழிந்து போன மாநகர சபையின் கட்டடத்தை மீளக கட்டுவதற்கு 2 கோடி ரூபா தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இதே போன்று யாழ்.பொதுசன நூலகத்தை கட்டுவதற்கு இரண்டு கோடி ரூபா தேவை என மதிப்பிடப்பட்டு கடந்த பத்து வருடங்களாக வேலைகள் நத்தை வேகத்தில் நடந்துகொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இன்று உள்ள சூழலில் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு நாம் முகம் கொடுக்கும் அதேவேளை மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்காகவும் குரல் கொடுக்க வேண்டும் - என்றார்.

பிரதி மேயராக கடந்த இரண்டு வருடங்கள் கடமையாற்றிய பின் மேயராக பதவியேற்ற ரவிராஜுக்கு மாநகரசபை உறுப்பினர்கள் தமது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் ம. மங்களநேசன், புளொட் உறுப்பினர்களான மு.தவநாதன், முகமட் பசீர், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த செல்லன் கந்தையன், ஈ.பி.டி.பி. உறுப்பினர் எஸ்.கனகரத்தினம், மாநகரசபையின் உதவி ஆணையாளர் ராசா தணிகாசலம் ஆகியோர் மேயரின் சேவைகளைப் பாராட்டி உரையாற்றினர்.

வாழ்த்து மற்றும் பாராட்டுக்களை தொடர்ந்து சபையின் கூட்டம் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது.

(உ-5-173)

## இரு இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம்,ஜன.25

கோண்டாவில் மற்றும் கோப்பாய்ப் பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர்களின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோண்டாவில் ரயில் நிலைய வீதியைச் சேர்ந்த இராஜமனோகரன் கிருபாகரன்(வயது21) என்பவர் கடந்த 20 ஆம் திகதி வீட்டில் வைத்து 511 ஆவது படையணி இராணுவத்தாலும் -

கோப்பாயில் இருந்து இடம் பெயர்ந்து தற்பொழுது ஆஸ்பத்திரி வீதி கொட்டடியில் வசித்து வருகின்ற ஆறுமுகம் சந்திரகுமார் (வயது 25) என்பவர் கடந்த 22 ஆம் திகதி வண்ணை சிவன் கோயிலடியில் வைத்து 513 ஆவது படையணி இராணுவத்தாலும் -

கைது செய்யப்பட்டுள்ளதாக அந்த முறைப்பாடுகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## ஆத்மீக சமுதாய கலாசார மண்டபம்

பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் சுமார் 25 லட்சம் ரூபா செலவில் ஆத்மீக சமுதாய கலாசார மண்டபம் அமைக்கப் பட்டு வருகிறது.

இக் கட்டட வேலைகள் பூர்த்தி செய்ய மேலும் நிதி தேவைப் படுவதால் பண உதவி செய்ய விரும்பும் அன்பர்கள் மேற்படி சேவாச்சிரமத்துடன் தொடர்பு கொள்ளும் படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-31)

# 3 வருட சேவை, அடிப்படை தகைமை கொண்ட தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

## அரசியல் தலையீட்டுக்கு இடமில்லை என்கிறார் கல்வி அமைச்சர்

கொழும்பு,ஜன.25

மூன்று வருட சேவை மூப்பும், அடிப்படைத் தகைமையும் கொண்ட வடக்கு, கிழக்கு தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் எந்தவித அரசியல் தலையீடும் இடம்பெற அனுமதிக்கமாட்டேன் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த செவ்வாய்க்கிழமை காலை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. அலிசாகிர் மௌலானாவின் (ஐ.தே.க) வாய்மூல வினாவுக்குப் பதிலளித்த அமைச்சர், வடக்கு கிழக்கு மாகாணத்தின் நிலைமையைக் கவனத்திற் கொண்டு விசேட கவனம் செலுத்தப் பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி ஒரு மாதத்துக்கு முன்னர் மேற கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை சபையின் கவனத்திற்கு கொண்டு வந்த திகாமடுல்ல மாவட்டத்தின் பி.தயாரத்ன எம்.பி குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சி இந்த விடயத்தில் தலையீடு செய்வதாக சாடினார்.(க)

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,ஜன.25

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் -

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன், விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

அளவெட்டி கிராம அபிவிருத்தி சங்க வி.க எதிர் காங்கேசன் துறை ஐக்கிய வி.க.

பன்னாலை கணேசன் வி.க எதிர் அளவெட்டி விநாயகர் வி.க. (க-86)

★ ★ ★

வலி.வடக்கு,ஜன.25

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களிடையே தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில்

### 16 வயதுப் பிரிவு

✪ வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம் எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

### 18 வயதுப் பிரிவு

✪ வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம் எதிர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் -

### 16வயதுப் பிரிவு

✪ கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் யாழ்.இந்துக் கல்லூரி.

✪ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலயம். (ஐ-86)

# புலிகளின் ஆதரவாளர்கள் லண்டனில் மாநாடு

## பிரிட்டிஷ் எம்.பிக்களும் பங்கேற்பு

கொழும்பு,ஜன.25

தமிழீழ விடுதலைப் புலிகள் இயககத்தின் ஆதரவாளர்கள் கடந்த திங்கட்கிழமை லண்டனில் ஒன்று கூடி முக்கிய மாநாடு ஒன்றினை நடத்தியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாநாட்டில் பிரிட்டிஷ் எம்.பிக்கள் சிலரும் பங்கேற்றுள்ளனர் எனக் கூறப்பட்டது.

புலிகள் இயக்கத்தை பிரிட்டன் தடைசெய்யக் கூடாது என்று பிரிட்டிஷ் எம்.பிக்களிடம் புலிகள் ஆதரவாளர்கள் கோரிக்கை விடுத்ததாகவும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு கையளிக்கவென மகஜர் ஒன்றை வழங்கியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரிட்டனின் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இந்த மாநாட்டில் பங்கேற்றதாகக் கூறப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் புலிகள் இயக்கத்தை தடைசெய்யுமாறு பிரிட்டிஷ் அரசாங்கத்தை வலியுறுத்தி வருவது தெரிந்ததே. (க)

## மாணவருக்கு வீடியோ காட்சி

யாழ்ப்பாணம்,ஜன.25

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமத்தினால் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இன்றும் நாளை வெள்ளிக்கிழமையும் மாணவர்களுக்கான நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இன்று முற்பகல் 11 மணிக்கு பஜனைக் கச்சேரி வீடியோ படக்காட்சியாகக் காண்பிக்கப்படவிருக்கின்றது. நாளை சிறுவர்களுக்கான சுவாமி விவேகானந்தர் பற்றிய கதை கூறுதலும், உயர்தர வகுப்பு மாணவிகளுக்கு 'ஆளுமை மேம்பாடு' எனும் தலைப்பில கருத்தரங்கும் இடம்பெறவுள்ளன. கல்லூரி அதிபர் திருமதி குட்டித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுகளில் சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தரவும் கலந்து கொள்ளவுள்ளார். கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர்களுக்கு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி விவேகானந்தரின் புத்தகக் கண்காட்சி இடம் பெறும். குறைந்த விலையில் புத்தகங்கள் விற்பனையும் நடைபெறவுள்ளன. (ஐ-10)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.25

கோப்பாய் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ஆஅகிலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும் சிறப்பு விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம், உப தலைவர் யுஎஸ்ஏரவி ஆகியோரும் கௌரவ விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் செல்வி வி.வேலுப்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-10)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.25

கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்க லங்கா சிமெந்து நிறுவனக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு இணுவிலில் உள்ள தற்காலிக காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-10)

## தவறிவிட்டது

செல்வி கோமதி சிவகுமாா, கரவெட்டி மேற்கு, கரவெட்டி எனும் முகவரியையுடைய எனது தேசிய அடையாள அட்டை (இல. 767220650V), விசேட அடையாளஅட்டை (இல.0909024184), பல்கலைக்கழக அடையாள அட்டை (DIP/V/12) என்பன மருதனார்மடத்திற்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இராமநாதன் அக்கடமியில் அல்லது திரு.சிவ்குமார், முகாமையாளர் மக்கள் வங்கி நெல்லியடி (தொ.பே. இல. 101 பதிவு செய்து 3256) அல்லது திருமதி சொ.சுபசீலன், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். (தொ.பே. இல.கணக்காளர் ஊடாக 3149) எனும் முகவரிக்கோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப் படும். (83339)

## நெஞ்சார வாழ்த்துகின்றோம்



கலாநிதி க.குணராசா

அகவை அறுபதை அடைந்த எங்கள்
தகைமை உடைய குணரா சாவெனும்
புகழில் மிக்க "செங்கை ஆழியான்"
மிகவாய் புகழாய் வாழ வாழ்த்துகின்றோம்;
நிர்வாகத் துறை நெடுநாட் பணியில்
சா்வா ண்மைகள் மிக்க வராக
உருவா கித்தன் உயர்ந்த சேவையால்
பெருவா ரியாகப் பணிகள் செய்தவர்.
உந்து சக்தியாய்(ப்) பல்கலைக் கழகம்
வந்திடப் பதிவா ளராக இருந்தும்
கந்தன் உறையும் நல்லூர்ச் செயலகம்
முந்துறத் தன்னை முதல்நிலை படுத்தியும்
சிறுகதை நாவல் எனும்துறை எல்லாம்
விறுவிறு ப்பாக விருத்தியை(ப்) பெருக்கியும்
தருவியும் துலக்கியும் வரலா றெல்லாம்
பெரு விருப்போடு பீடுற வைத்தும்
பள்ளிச் சிறுவர் பக்கு வமாக
அள்ளிப் பருக அறிவினை அகட்டியும்
தெள்ளிய தமிழில் தெரிந்த தெல்லாம்
மெள்ள மெள்ள மீட்டுக் கொடுத்தும்
பல்லா ண்டாக வாழ்ந்தவர் "ஆழியான்"
எல்லா நலனும் இவர்பெற் றோங்கவும்;
வல்லான் முருகன் அருள்பெற்(று) உயரவும்
சொல்லான் மனத்தால் வாழ்த்துகிறோம் வாழி

நல்லூர் பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்.

(சி)4971)

★ ரீப்ரொப் ★
மாட்டிறைச்சிக் கடை

இணுவில் பொதுச் சந்தையில் ரீப்ரொப் மாட்டிறைச்சிக் கடை திறக்கப்பட்டு இருக்கின்றது. அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் வருக! வருகவென அன்புடன் அழைக்கின்றோம்.

தரமான இறைச்சியைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

விற்பனையாளர்:- ரீப்ரொப்குமார்
உரிமையாளர் :- அ.ஸ்கூனர்
(சந்தனம்)

(83330)

# ஆஞ்சநேயர் பவனி

யாழ்ப்பாணம்,ஜன.25

மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக பருத்தித்துறைக்குக் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட ஆஞ்சநேயர் விக்கிரகம் நேற்றுக் கப்பலிலிருந்து இறக்கப்பட்டு தெல்லிப்பழைக்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

பருத்தித்துறையில் வைத்து இலங்கை மின்சார சபையின் அலங்கரிக்கப்பட்ட வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்ட மேற்படி விக்கிரகம் பருத்தித்துறை வீதி,மந்திகைச் சந்தி, ஆதார வைத்தியசாலை வீதியூடாக நெல்லியடிச் சந்தியை வந்தடைந்து பின்னர் யாழ்வீதியூடாக பவனியாக எடுத்துவரப்பட்டது.

பொதுமக்கள் வீதியோரங்களிலும்,வர்த்தக நிலையங்களின் முன்பாகவும்,வீடுகளின் முன்பாகவும் நின்று விக்கிரகத்தை வணங்கிக் காணிக்கை செலுத்தினர்.

பின்னர் அச்சுவேலி,ஆவரங்கால், புத்தூர், சுன்னாகம் ஊடாக விக்கிரகம் நேற்றிரவு தெல்லிப்பழைக்கு எடுத்து வரப்பட்டது.

இன்று காலை தெல்லிப்பழையில் இருந்து ஆரம்பமாகும் விக்கிரகப் பவனி சுன்னாகம்,உடுவிலிராய், திருநெல்வேலி ஊடாக யாழ் பெருமாள கோயிலை வந்தடையும்.

பின்னர் அங்கிருந்து கே.கே.எஸ்.வீதியூடாக இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயத்துக்கு வந்துசேரும் விக்கிரகம், மங்களவாத்தியங்கள் முழங்க பிரதிஷ்டை செய்யப்படவுள்ள மருதனார்மடம் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

நாளை வெள்ளிக்கிழமை முதல் இரண்டு தினங்களுக்கு தினமும் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.கும்பாபிஷேகக் கிரியைகள் 29 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறும்.

(உ-7-31)

## போர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யகத் தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் மனோகணேசன் உட்பட பத்து தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஐரோப்பிய சமூகத்தின் தலைமைப் பதவியை தற்பொழுது சுவீடன் வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-5)

## யுத்தநிறுத்தம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"யுத்தநிறுத்த நீடிப்பு மூலம் அரசுக்கு அரசியல் சவால் விடுத்திருக்கின்றார்கள் புலிகள். அரசு யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்கு வராவிட்டால், அரசியல் தீர்வில் அதற்கு நம்பிக்கை இல்லை என்பது அம்பலமாகிவிடும்." - என்றார் ரெலோ முதல்வர் என். ஸ்ரீகாந்தா.

"பேச்சுக்கு முன் இரு தரப்பினரிடையேயும் நட்புறவு, பரஸ்பர நம்பிக்கை ஆகியவை தேவை. புலிகள் அதற்கு அடித்தளம் இட்டுள்ளனர். அரசு இதை நிராகரிக்குமானால் உள்நாட்டில் மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியிலும் இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அரசு பொறுப்பேற்க வேண்டி நேரும்."- என்றார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவரும் எம்.பியுமான வீ.ஆனந்தசங்கரி.

"சமாதானத்தின் மீது தாம் கொண்டுள்ள அக்கறையையும், ஆர்வத்தையும் இந்த அறிவிப்பு மூலம் புலிகள் மீண்டும் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்டியுள்ளனர்." - என்றார் காங்கிரஸ் கட்சித் தலைவர் அ.விநாயகமூர்த்தி.

(உ-5)

# பொருள்களை ஒப்படைக்காமலேயே தென்மராட்சி ஆசிரியர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு வசதி

திருகோணமலை,ஜன.25

பொருள் பதிவேடுகளின்படி பாடசாலை உபகரணங்களைக் கையளிக்காமையால், ஓய்வூதியம் வழங்கப்படாதிருந்த தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பான தீர்மானமொன்று திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற மாகாணக் கல்வி அமைச்சின் ஆலோசனைக்குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்டதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் நேற்றிரவு 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா, கல்வி அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.சிவானந்தன் மற்றும் உயரதிகாரிகள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட சில முடிவுகள் வருமாறு:-

- தென்மராட்சிப் பகுதி அதிபர், ஆசிரியர்கள் இடம்பெயர்ந்து வசிப்பதனால் அவர்கள் ஓய்வு பெறும் போது பொருள் பதிவேடுகளின்படி பாடசாலை உபகரணங்களைக் கையளிக்கத் தேவையில்லை. இதற்கான ஏற்பாடுகளை மாகாண ஆளுநருடன் இணைந்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மேற்கொள்ளும்.
- 2001 ஆம் ஆண்டில் மேலும் மூவாயிரம் ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கல்வி அமைச்சையும், உலக வங்கியையும் கோருதல்.
- ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டு இதுவரை வழங்கப்படாமல் இருக்கும் ஆசிரியர் நியமனங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன் வழங்குதல்.
- ஆசிரியர் பதவி உயர்வு குறித்த கடிதங்களையும்,பதவி உயர்வுக்கேற்ப சம்பள மாற்றுக் கடிதங்களையும் அடுத்த இரு மாதத்துக்குள் வழங்க நடவடிக்கை எடுத்தல்.

(உ-7)

## நாணயமாற்று..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இந்த நடவடிக்கையால் இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடையும் வாய்ப்புகளே அதிகம் என்று சில பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவித்தனர்.

மத்திய வங்கியின் அறிவித்தலின்படி -

இனிமேல், சந்தையில் புழக்கத்திலுள்ள நாணயங்களுக்கான சராசரி விலைகளின் அடிப்படையில் அமெரிக்க டொலரினதும் ஏனைய வெளிநாட்டு நாணயங்களினதும் விலைகளை வர்த்தக வங்கிகளும் சந்தை சக்திகளும் தீர்மானிக்கும் நிலை ஏறபட்டுள்ளது. இதனமூலம் வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களை கட்டுப்படுத்தும் செயற்பாடு மத்திய வங்கியிடமிருந்து வர்த்தக வங்கிகளுக்கும் வெளிநாட்டு நாணயமாற்று நிறுவனங்களுக்கும் கைமாறியிருப்பதாகவும் -

இதனால் எதிர்காலத்தில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைவது தவிர்க்கமுடியாதது என்றும் -

பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

காலையில் 82 ரூபாவாகவிருந்த டொலரின் பெறுமதி மத்திய வங்கி இந்த அறிவிப்பை நேற்றுமுன்தினம் விடுத்த உடனேயே 90 ரூபாவாக உயர்ந்தது. எனினும் சற்று நேரத்தில் அதன் பெறுமதி 88 ரூபாவாக வீழ்ச்சி கண்டது.

டொலரின திடீர் அதிகரிப்பால் புறக்கோட்டைச் சந்தையில் வர்த்தக நடவடிக்கைகள் அன்று நண்பகலின் பின்னர் பெரிதும் ஸ்தம்பிதமடைந்தன.

இதனால் அத்தியாவசியப் பொருளகளின் சில்லறை மற்றும் மொத்த விலைகள் திடீரென கிலோவுக்கு ஐந்து ரூபா முதல் பத்து ரூபாவால் அதிகரிக்கப்பட்டதாக அந்தச் செய்திகள் தெரிவித்தன.

அடுத்து வரும் நாள்களில் பொருளகளின் விலைகள் மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது.

(உ)

## அக்கரைப்பற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள ஏழு தமிழ்ப் பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் ஆறாயிரம் மாணவர்கள் இந்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர் என அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

மேற்படி பகிஷ்கரிப்புப் போராட்டம் காரணமாக சம்பந்தப்பட்ட பாடசாலைகள் முற்றாகச் செயலிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் தேசிய பாடசாலை, இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம், விவேகானந்த வித்தியாலயம், திருநாவுக்கரசு வித்தியாலயம், பெருநாவலர் வித்தியாலயம், விநாயகர் வித்தியாலயம், இராஜவரோதய வித்தியாலயம்- ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களே இந்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

(உ-7-5-14)


எமது ஒறிஜினல் பிரமிட் வீடியோ CD வெளியீடுகள்

- மனுநீதி
- கண்டேன் சீதையை
- நீ எந்தன் வானம்
- வடிவேல் நகைச்சுவை
- ஊரைத்தெரிஞ்சிக்கிட்டேன்
- நீதியின் மறுபக்கம்
- நினைத்ததை முடிப்பவன்
- ஜல்லிக்கட்டு
- மைதிலி என்னைக் காதலி
- ஆளர்பாவம்
- நாகேஸ் நகைச்சுவை
- விதி

✲ புதிய பல ஆங்கில திரைப்பட CD களும் காட்டூன் CD களும் உள்ளன

ஓடியோ,வீடியோ CD கவர்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

I.T.N வீடியோ

27, கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு.
T.P-021-3123
(83336)

BRIGHTMAN
கல்வி நிலையம்
(நீராவியடிப் பிள்ளையார் கோயில் முன்பாக)
பிறவுண் வீதி, யாழ்நகர்
மீண்டும்
சிங்களம்
BY:- விஜயகிருஸ்ணன்
ஆரம்பம்:- 27-01-2001
(83233) SAT. 4.00

இன்று ஆரம்பம்!
2000 A/L DAY
Com - Maths
SUBRA (T4)
சித்தன்கேணி
A. பத்மநாதன்
(83191) (காலை 9.00)

JAFFNA
TECHNICAL INSTITUTE
JAFFNA SRI LANKA
பதிவுகள்

புலமைப் பரிசில் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. உங்கள் பதிவுகளை 09-02-2001க்கு முன்னர் மேற்கொள்ளவும்.

புதிய பிரிவு I ஆரம்பம்: 28-01-2001(10 a.m.)
II ஆரம்பம்: 02-09-2001(10 a.m.)

NO.7,Palaly,Road,
Jaffna.
(இலுப்பையடிச்சந்தி அருகில்)
- Director.
(C/14973)

அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்
நூதன பிரதிஷ்ட மஹா கும்பாபிஷேகம்

29-01-2001 திங்கட்கிழமை
காலை 7.00 மணி - 8.33 மணிவரை நடைபெறும்.
பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம்
26-01-2001 வெள்ளிக்கிழமை, 27-01-2001 சனிக்கிழமை
காலை 6.00 மணி - மாலை 6.00 மணிவரை நடைபெறும்.

இணுவில்,
மருதனார்மடம்,
சுன்னாகம்.
சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக்குருக்கள்
தர்மகர்த்தா
(சி.14975)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
இல்ல மெய்வல்லுநர் போட்டி-2001

27-01-2001 பிற்பகல் 1.00 மணி.
பிரதம விருந்தினர்:
திரு.நா.க.சண்முகநாதபிள்ளை அவர்கள்
(முன்னாள் அதிபர்)
பரிசில் வழங்குதல்:
திருமதி ச.பத்மாசனிதேவி அவர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர்
ஆசிரியர்,மாணவர்.,
குறிப்பு: கழகங்களுக்கிடையேயான 4X200m அஞ்சல் இடம்பெறும்.
26-01-2001 மு.ப.8.30 - 2.30வரை பதிவு செய்யலாம்.
(C/14966)


# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னையா நல்லம்மா

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் புலோலி மேற்கு திருநாவலூரை வதிவிடமாகவும் கொண்ட மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலை ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி பொன்னையா நல்லம்மா நேற்று (24-01-2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டிதர் மூத்ததம்பி பொன்னையா (அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் திருச்செல்வம் (அஞ்சல் அலுவலகம் - பருத்தித்துறை), விக்கினேஸ்வரன் (கனடா), சோமாஸ்கந்தன் (சுகாதாரத் திணைக்களம் - வவுனியா), பராசக்தி, வசந்தாதேவி (ஆசிரியை, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை - பருத்தித்துறை), ஜெயதேவி, சிவகௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தி.விஜயரத்தினம் (உதவி முகாமையாளர், இலங்கை வங்கி), ஆ.வேலும்மயிலும் (இளைப்பாறிய அஞ்சல் அதிபர்), வ.ச.செல்வராசா (கமநல சேவைகள் திணைக்களம் - யாழ்ப்பாணம்), ந.சிவபாலன் (சுகாதார பரிசோதகர்), திருமதி தி.லீலா, திருமதி வி.சாந்தினி (கனடா), திருமதி சோ.நிரஞ்சனா ஆகியோரின் அன்பு மாமியும் வேலாயுதபிள்ளை (திருகோணமலை), சண்முகசுந்தரம் (மானிப்பாய்), பரமலிங்கம் (இணுவில்), புவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற மகேஸ்வரி (இணுவில்), பூமணி (திருமலை), தவமணி (கொக்குவில்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

தகனக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் சார்பில்
வ.ச.செல்வராசா (மருமகன்)

(சி.14976)


வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக்குழு இளைஞர் பிரிவினர் நடத்தும்

மனித மேம்பாடுகள் ஊடாக ஆன்மீகம் கண்காட்சி

இடம்:- யாழ்/இந்து ஆரம்ப பாடசாலை
காலம்: 26-01-2001 (வெள்ளி), 27-01-2001 (சனி)
காலை 9.00 மணி - மாலை 5.00 மணி வரை.

பிரவேசம் இலவசம், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணைப்புக்குழு, வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனங்கள்
(C/14943)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.01.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.